# புனித யாத்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் – புனிதயாத்திரை

வெளியீடுவோர் :– ஜோண்சன் மோகனதாஸ்
ஜட்சன் கிருபாகரன்
ஜென்றசன் தயாபரன்
சாறா ஜெயநிதி
டேவீட்சன் ஜீவநாதன்

விலாசம்: ஜோய்ஸ் பிளேஸ், நல்லூர்

தொகுப்பாளர். "வானம்பாடி"
வெளியீடு – 1997 – 12 – 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதிரி - கி. நவநீதராசா



# முன்னுரை

1996ம் ஆண்டு August மாதம் எட்டாம் நாள் மகிமைப் பிரவேசம் அடைந்த எனது சகோதரன் A.D. Paul அவர்களின் முதலாம் வருட நினைவாக இந்த நூல் வெளிவருவதில் மன நிறைவடைகிறேன். இப்படியான நூல் ஒன்று வெளிவர வேண்டுமென விரும்பியவர் இரு வருடங்களின் முன்னர் நித்திய வாழ்வுக்குட் பிரவேசித்த ஜோசெப் பரமதாஸ் அவர்கள். அவர் விரும்பிய விடயங்கள் பல இடம் பெறாவிடினும் அவரது ஆத்ம திருப்திக்காக ஒரு சில விடயங்களையேனும் எழுத முடிந்ததையிட்டுத் திருப்தியடைகிறேன். வதிரியில் மெதடிஸ்த பாரம்பரியம் ஒன்றின் செயற்பாடு அருகி வருகின்ற இவ்வேளையிலும் இசைப் பாரம்பரியம் ஒன்று வளர்ச்சியடைந்து வருகின்ற நிலை மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்குமென நினைக்கிறேன்.

இந் நூல் இனி வெளிவர இருக்கும் இசை, நாடகம், கவிதை ஆகிய பாரம்பரியங்களின் வரலாற்றையும் அந்தப் பாரம்பரியங்களிற் சிறந்து விளங்கிய இசைக் கலைஞர்களையும், நாடகக் கலைஞர்களையும், கவிஞர்களையும் வெளிக்கொணரும் நூலின் ஓர் அறிமுக நூலாக அமைகின்றது. அப்படியான நூல் ஒன்று இந்த நூற்றாண்டுக்குள் வெளிவரும் என்ற நம்பிக்கையுடன் எனது முன்னுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

டேவிட் நைல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 1

## மெதடிஸ்த நற்செய்திப் பணியாளரின் இலங்கை விஜயம்

இலங்கை மண்ணில் 1814ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் திகதி மெதடிஸ்த நற்செய்திக் குழுவினர் காலடி வைத்தனர். இவர்கள் காலிக்குக் கிட்டவுள்ள இடத்தில் இறங்கிப் பின்னர் கொழும்பை அடைந்தனர். 1816ம் ஆண்டு இவர்களிற் சிலர் இலங்கையின் வட பகுதி நோக்கியும், கிழ் பகுதி நோக்கியும் சென்றார்கள். வட பகுதியில் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, அச்செழு, புத்தூர், பருத்தித்துறை, கட்டைவேலி, கற்கோவளம், அல்வாய், நெல்லியடி ஆகிய பிரதேசங்களில் நற்செய்திப்பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நற்செய்திப் பணியின் நோக்கம் "மதமாற்றம் அல்ல மனமாற்றமே" என்ற அடிப்படைக் கொள்கைக்கேற்ப நற்செய்திப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. சமூக வேறுபாடுகள், மார்க்க வழிபாட்டு வேறுபாடுகள் நற்செய்திப் பணியாளர்களுக்கு இடைஞ்சலாக இருந்தாலும் இவற்றுக்கூடாகக் கிறிஸ்தவ நற்செய்தி எல்லா மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதே அவர்களின் ஆவலாக இருந்தது. மக்களின் அடிப்படைத் தேவைகள் அறியப்பட வேண்டும்: அவர்களுக்கு இருக்கும் இயல்பான ஆற்றல் கண்டு பிடிக்கப்பட வேண்டும்: இவற்றுக்குப் பொருத்தமாக ஒவ்வொரு பிரதேசத்திலும் நற்செய்திப் பணியாளர்கள் செயற்பட வேண்டும் என்ற நோக்கு மெதடிஸ்த திருச்சபைக்கு இருந்தது பாராட்டுக்குரிய விடயமாகும். பொருத்தமான நற்செயதிப் பணியாளர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து ஒவ்வொரு பிரதேசத்துக்கும் அனுப்பி நற்செய்திப் பணியைச் செய்யும் பணியில் திருச்சபை உற்சாகமாக இயங்கத் தொடங்கியது.

## ஆண்டி என்பவர் கண்டு பிடிக்கப்படுகிறார்

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை: மாலை 4 மணியிருக்கும்: யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வழியாகத் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி நான்கு பேர் நடந்து வந்து கொண்டிருந்தனர்: இருவர் தமிழர்: இவர்கள் நற்செய்திப்பணி செய்வதற்காக வீடு வீடாகச் சென்று கொண்டிருந்தனர். நாவலர் வீதி சந்தியைத் தாண்டி நாலைந்து வீடுகளிலும் நற்செய்தியை முடித்துக்கொண்டு ஒரு சிறு குடிசைக்குள் நுழைந்தனர்.

ஒரு தாய் அவவைச் சுற்றி ஐந்து பிள்ளைகள்: தாயின் முன்னிலையில் ஒரு கஞ்சிப் பானை: அவளது கையில் ஓர் அகப்பை: பிள்ளைகளின் கைகளில்தேங்காய்ச் சிரட்டைகள்: ஒவ்வொருவருடைய சிரட்டையிலும் கஞ்சியை அள்ளி ஊற்றிக் கொண்டிருந்தாள்: பிள்ளைகள் பசிக்களையில் அவசரம் அவசரமாகக் குடித்துக் கொண்டிருந்தனர். வந்தவர்கள் இக்காட்சியைக் கண்டு கலங்கிய நிலையில் தங்களுக்குள் உரையாட ஆரம்பித்தனர். "What are they drinking"? என வெள்ளைக்காரப் பெண் அவர்களுடன் வந்த தமிழ்ப் பெண்ணை விசாரித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"They are drinking gruel" என தமிழ்ப்பெண் பதிலிறுத்தாள். "காலைச் சாப்பாட்டுக்குப் பின்னர் மதிய உணவும் இரவு உணவும் ஒன்றாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்" என அத்தாய் அத்தமிழ்ப் பெண்ணுக்குக் கூறிக் கொண்டிருந்த வேளை அவளின் கணவர் தோட்டத்திற் கூலி வேலை செய்து வீட்டுக் களைத்து விழுந்து வந்து சேர்ந்தார். பெற்றாரோடு உரையாடிய பின்னர் "உங்கள் பிள்ளைகளில் ஒருவரை எம்மோடு கூட விடுவீர்களா? நாம் அவரைப் படிப்பித்து ஒரு நல்ல மனிதனாக்குவோம்" என்றதும் பெற்றோரின் கண்கள் கலங்கிக் கண்ணீர் சிந்தினது. "நாங்கள் இன்னொரு நாள் வருவோம் நீங்கள் ஆறுதலாக யோசித்துச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு அந்த அம்மாளின் கையில் ஒரு கடித உறைக்குட் பணம் வைத்துக் கொடுத்து அன்றைய நற்செய்திப் பணியை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார்கள்.

பெற்றோர் இந்த விடயத்தை மிகவும் ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தனர். ஐந்து பிள்ளைகளையும் வளர்த்தெடுப்பதில் உள்ள கஷ்டங்களை உணர்ந்தார்கள். நற்செய்திப் பணியாளர் சொன்ன விடயத்தைப் பிள்ளைகளுக்குத் கூறினார்கள். பிள்ளைகளும் அதைப் பற்றிச் சிந்திக்கலானார்கள். ஒரு நாள் மகன் ஒருவன் பெற்றோரைக் கேட்டான் "நான் ஒரு குறைபாடுள்ளவன்; ஒரு நொண்டி; உங்களுக்குப் பாரமாய் இருக்க விரும்பவில்லை; எனக்கு இயல்பாக உள்ள ஆற்றல்களைப் பயன்படுத்தி என் வாழ்வை மேம்படுத்தலாம்; எனக்கு படிப்பது மிகவும் விருப்பம்; படித்து உத்தியோகம் பார்ப்பது உங்களுக்கும் மகிழ்ச்சியாயிருக்கும்; என்னை அவர்களோடு அனுப்புங்கள்" என்றதும் எல்லாரும் அவனை அணைத்து முத்தமிட்டு அழுதார்கள். அவன் பெயரே ஆண்டி; நொண்டி ஆண்டி என அன்பாக அழைப்பார்கள்.

## ஆண்டி "பீற்றர் ஆண்டி" ஆகிறார்.

ஒரு நாள் அதிகாலை; குதிரை வண்டி ஒன்று குடிசையின் வாசலில் வந்து நின்றது. நால்வர் அதிலிருந்து இறங்கினார்கள்; உள்ளே நுழைந்தார்கள். ஆண்டி அவர்களை வரவேற்று "நீங்கள் அன்று கூறிவிட்டுச் சென்ற விடயத்தைப் பற்றி நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்துள்ளோம்; நானே உங்களோடு கூட வரவிரும்பியுள்ளேன்; என்னை ஏற்றுக்கொள்ள விரும்பினாற் கூறவும்" என்றான். அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவனைக்கட்டி அணைத்து முத்தமிட்டு "நீ இந்த நேரமே எம்மோடு வரலாம்; உன்னை மனிதரைப் பிடிக்கிறவன் ஆக்குவோம்" எனக்கூறி அவனை அழைத்துச் சென்று குதிரை வண்டிக்குள் ஏற்றினார்கள். குதிரை வண்டி நகரத் தொடங்கியது. ஆண்டி பெற்றோருக்கும் சகோதரங்களுக்கும் கை அசைத்தபடியே இருந்தான். வண்டி தெற்கு நோக்கி நாவலர் வீதிச் சந்தியைத் தாண்டி முடக்கினாற் திரும்பியதும் பெற்றோரும் பிள்ளைகளும் உள்ளே சென்று விட்டார்கள். குதிரை வண்டி பரிசுத்த பேதுரு ஆலய வளாகத்தை அடைந்தது. ஆண்டியை அங்குள்ள பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தி அவனையும் அத்திருச்சபையிற் சேர்த்துப் பாடசாலையிற் படிக்க வைத்துப் "பீற்றர் ஆண்டி" எனப் பெயர் சூட்டி அழைத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிரி வடக்கில் ஒரு மெதடிஸ்த பாடசாலை உருவாகிறது

பீற்றர் ஆண்டிக்கு வயது வந்த போது அவனை ஒரு பூரண அங்கததவனாகச் சபையிற் சேர்த்து நற்செய்திப் பணியில் இணைத்து விட்டார்கள். பருத்தித்துறை கட்டைவேலிச் சேகரத்துக்கு நற்செய்திப் பணியாளர் போதாது என அறிந்ததும் பீற்றர் ஆண்டியை அங்கு அனுப்பி வைத்தார்கள். இவர் வதிரிப் பக்கத்துக்கு நற்செய்திப் பணி செய்து வந்த வேளையில் அந்தப் பிரதேசத்தில் கல்வியிற் தாகமாயிருந்த பல பிள்ளைகளைக் கண்டு பிடித்தார். அவர்களைப் படிப்பிக்க ஒரு பாடசாலை தேவை என்பதைத் திருச்சபைக்கு அறிவித்தார். திருச்சபை ஒரு குழுவினரை வதிரிக்கு அனுப்பி பாடசாலைக்கு ஒரு கட்டிடம் அமைப்பதற்கு ஒரு நிலம் உடனடியாகத் தேவை என்பதை விளம்பரம் செய்திருந்தனர். இதைக் கேள்வியுற்ற முருகுப்பிள்ளைச் சட்டம்பியாரின் தந்தை வதிரி வடக்குப் பகுதியில் தனக்கிருந்த நாலரைப் பரப்புக் காணியைத் திருச்சபைக்கு நன்கொடையாகக் கொடுத்தார். பீற்றர் ஆண்டியும் அந்த ஊர் மக்களும் கொட்டில்கள் அமைத்து 1858ம் ஆண்டளவில் பாடசாலை நடைபெறத் தொடங்கி விட்டது.

## வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையாக மாற்றம் அடைகிறது

பீற்றர் ஆண்டியே அப்பாடசாலையின் முதல் அதிபராகவும் ஆசிரியராகவும் பணிபுரிந்து வந்தார். வதிரியையும் அதைச் சூழவுள்ள இடங்களிலும் நடைபெற்ற திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டு அங்கு படித்த பிள்ளைகள் யாவரும் வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலையிற் படித்து வந்தார்கள். பிள்ளைகளின் பெற்றோர் பாடசாலையின் வளர்ச்சியில் மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருந்தனர். பெண் பிள்ளைகளும் படிக்க வரத்தொடகிய போது அவர்களுக்குப் பன்னவேலை, தையல் வேலை படிப்பிக்கக் கூடிய பெண் ஆசிரியை தேவைப்பட்டது. அல்வாய் தெற்கிலுள்ள பன்னாம்பதை என்ற இடத்திலிருந்து ஒரு பெண் படிப்பிக்க முன் வந்தா. நாளடைவில் பிள்ளைகளும் கூட, ஆசிரியர்களும் கூடிக் கொண்டே வந்தது. திருச்சபையின் முயற்சியால் விரைவில் அரசாங்க அங்கீகாரம் கிடைக்கப் பெற்று அரசாங்க உதவி பெறும் பாடசாலையாக மாறியது. கொட்டில்கள் கட்டிடங்களாக மாறின. பாடசாலைப் பெயரும் 'வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை' யாக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீற்றர் ஆண்டி பரம்பரையில் ஓர் இசைப் பரம்பரை உருவாகிறது

பீற்றர் ஆண்டிக்கு ஒரு துணைவி தேவைப்பட்ட போது பன்னாம்பத்தையைச் சேர்ந்தவவும் அதே பாடசாலையிற் படிப்பித்துக் கொண்டிருந்தவவுமான பெண் ஆசிரியை முன் வந்தா. இருவரும் கல்விப்பணியிலும், சமூகப்பணியிலும் ஆர்வமாகச் செயற்பட்டு வந்தனர். இவர்களுக்கு மூன்று ஆண் மக்கள் பிறந்தார்கள். மூத்தவர் பென்சமின் பசுபதி, அடுத்தவர் டானியல் பண்டாரம், மற்றவர் ஜோசெப் கணபதிப்பிள்ளை, பீற்றர் ஆண்டியும் அவரது துணைவியும் கல்விப்பணியிலிருந்து ஓய்வு பெறும் காலம் வந்தது. பென்சமின் பசுபதி பீற்றர் ஆண்டியின் பதவியில் அமர்ந்தார். அவருக்கு உதவி ஆசிரியராக டானியல் பண்டாரம் பதவி ஏற்றார். ஜோசெப் கணபதிப்பிள்ளையின் ஆற்றல் இசைத்துறையிலும், விவசாயத் துறையிலும் காணப்பட்டபடியால் அவர் மெதடிஸ்த கட்டுக்கோப்பிலிருந்து விலகி ஒரு புதிய இசைப்பரம்பரையை உருவாக்குவதில் அவரது ஆர்வங்கள் தொழிற்பட்டன. பென்சமின் பசுபதி பார்வதி என்ற பெண்ணை விவாகம் செய்து அவவும் அப்பாடசாலையின் ஆசிரியையாகப் பதவி ஏற்றா. டானியல் பண்டாரம் பார்வதியின் சொந்தச் சகோதரியான ஆச்சிக்குட்டி என்பவவை விவாகம் செய்து அவவும் அப்பாடசாலையில் ஆசிரியையாகப் பதவி ஏற்றா. ஜோசெப் கணபதிப்பிள்ளை தனது ஆற்றலுக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைக் கரவெட்டியிலுள்ள கலட்டி என்ற பிரதேசத்திற் கண்டு பிடித்து விவாகம் செய்தார். இவரின் சந்ததியில் ஒரு புதிய இசைப் பரம்பரை உருவாகி இன்று அது அண்ணாவி புதியார் இசைப் பரம்பரையாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

## பென்சமின் பசுபதி பார்வதி குடும்பம்

பீற்றர் ஆண்டிக்குப் பொருத்தமான பெண் எவ்வாறு கிடைத்ததோ பென்சமின் பசுபதிக்கும் மிகப் பொருத்தமான பெண்ணாகப் பார்வதி கிடைத்தது மகிழ்ச்சியான விடயமாக இருந்தது. பென்சமின் பசுபதி மூன்று ஆண்களுக்கு மூத்த பிள்ளை, பார்வதி மூன்று பெண்களுக்கு மூத்த பிள்ளை பென்சமின் பசுபதி ஓர் அழகான; நல்ல குணாதிசயங்கள் உள்ள; ஆற்றல்கள் நிறைவாக உள்ள ஒருவர்; அவரைப் போலவே பார்வதியும் நிறைவான அழகிலும், ஆற்றல்களிலும், குணாதிசயங்களிலும் சிறந்து விளங்கினா. பார்வதியின் சொந்தச் சகோதரிகளான ஆச்சிக்குட்டியையும், இளையாச்சியையும் எம்மிற் பலர் பார்த்திருக்கிறார்கள்; அவர்களை அழகுத் தெய்வங்கள் என்றே கூறுவார்கள். பென்சமின் பசுபதிக்கும் பார்வதிக்கும் நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்தவர் யோசெப்பு, அடுத்தவ சாரா அம்மா, அடுத்தவ விக்ரோறியா குணம், அடுத்தவர் ஜேம்ஸ், இவர்களின் காலம் கல்வித்துறையில், கலை, கலாசாரத்துறையில், ஆன்மீகத் துறையில் புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இலங்கையின் வடபகுதியில் கத்தோலிக்க, மெதடிஸ்த, அங்கிளிக்கன், தென்னிந்திய ஐக்கிய திருச்சபைகள் கல்விப் பணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமாக இயங்கின. அநேக ஆங்கில பாடசாலைகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் தரமான உயர் கல்விப் பட்டங்கள் வழங்கப்பட்டன. தமிழில் பால பண்டித, பிரவேச பண்டித, வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு பல பண்டிதர்கள், கவிஞர்கள் உருவாக்கப்பட்டார்கள். கிறிஸ்தவ திருச்சபைகளின் சார்பில் தெல்லிப்பளையில் ஒரு கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு அநேக கிறிஸ்தவ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டார்கள். இந்த வசதிகளைப் பயன்படுத்தி யோசெப்பு அவர்கள் பண்டித பரீட்சையைச் சித்தியடைந்து தெல்லிப்பளை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிற் படித்து பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். அவர் ஆசிரிய கலாசலையிற் படிக்கும் போதே ஆங்கிலத்தை இலக்கண ரீதியாகப் பேச எழுதக் கற்றுக் கொண்டார். அதனால் அவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவர் கவிதைத் துறையிலும், கணிதத் துறையிலும் சிறந்து விளங்கினார். இவரது ஆற்றல்களை அறிந்த தென்னிந்திய ஐக்கிய திருச்சபையாரும், மெதடிஸ்த திருச்சபையாரும் கிறிஸ்தவ ஆலயங்களில் நிகழும் முக்கிய சமய நிகழ்சிகளுக்குப் பாடல்களை இயற்றி இசை அமைத்துப் பாடவும் மற்றவர்களுக்குப் பயிற்றவும் பாவித்துக் கொண்டனர். இவருக்கு நிறைவான இசை ஞானம் இருந்தது. வயலின், ஹார்மோனியம், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகளை இசைப்பதிலும் கைதேர்ந்தவர். இவர் யாழ்பாணக் குடா நாட்டிலேயே ஒரு பிரபல கல்விமானாகவும், கவிஞராகவும், கிறிஸ்தவ நற்செய்திப் பணியாளராகவும் விளங்கினார். பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளிப்பட்டதும் அவரைப் பருத்தித்துறை – கட்டைவேலி மெதடிஸ்த சேகரம் வதிரி வடக்கு மெ.மி. பாடசாலையிலேயே நியமித்தது. தந்தையாருக்குப் பின்னர் பாடசாலையின் பொறுப்பு அவரிடம் வழங்கப்பட்டது. இதுவரை தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களை அதிபர்களாகவும் உதவி ஆசிரியர்களாகவும் கொண்டு இயங்கிய இப்பாடசாலை ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரை அதிபராக நியமிக்கக் கூடிய தரத்துக்கு உயர்த்தப்பட்டது. வதிரியிலிருந்து முதன் முதலாக உருவாகிய பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், வதிரி வடக்கு மெ. மி. பாடசாலையின் முதல் அதிபராகவும் விளங்கியது வதிரியின் வரலாற்றிலும், ஒரு முக்கிய திருப்பமாக இருந்தது.

சேரா அம்மா, விக்டோறியா குணம் ஆகிய இருவரும் தந்தை, தாயாரிடமும், சிறிய தந்தை, சிறிய தாயாரிடமும் வதிரி வடக்கு மெ. மி. பாடசாலையிலேயே கல்வி கற்று வீட்டு வீட்டில் பெற்றாருக்கு உதவியாக வேலையில் அமர்ந்து விடுகிறார்கள். இளையவரான ஜேம்ஸ் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் படிக்கச் சென்றார். அங்கே சில வருடங்கள் படித்துக் கொண்டிருக்கும் தருணத்தில் விளையாட்டுப் போட்டியில் உயரப் பாய்தல் நிகழ்ச்சி ஒன்றிற் பங்கு பற்றிய போது அவரது கால் ஒன்று விபத்துக்குள்ளாகி அக்கல்லூரிப் படிப்பை முடிக்க வேண்டி ஏற்பட்டது. கால் சுகப்பட்ட பின்னர் S.S.C சித்தியடைந்து வீட்டில் இருக்கும் போது த. இரத்தினம் அவர்கள் வியாங்கொடை அரசினர் தமிழ்ப் பாடசலை ஒன்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அவர் ஜேம்ஸ் அவர்களை அழைத்துத் தனது பாடசாலையில் ஓர் உதவி ஆசிரியராக நியமித்தார். பின்னர் படிப்படியாக ஆசிரிய தராதரப் பத்திரம், பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பத்திரம் ஆகிய உயர்கல்வித் தகைமைகளைப் பெற்றார்.

## டானியல் பண்டாரம் ஆச்சிக்குட்டி குடும்பம்

இவர்களுக்கு சாமுவேல், நேசம், அரியம் ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். சாமுவேல் உயர்கல்வியை முடித்து, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிப் படிப்பையும் முடித்துக் கொண்டு தென்னிலங்கையில் அளுத்தகம பிரதேசத்திலுள்ள ஒரு பாடசாலையில் ஓர் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார். இவரிடம் பல திறமைகள் காணப்பட்டன. இசைத் துறையில் மிகுந்த ஆர்வம் உடையவர் அந்தக் காலத்தில் 'கிறாம்போன்' என்ற இசைத் தட்டுக் கருவி ஒன்றைச் சொந்தமாக வாங்கி வைத்துக் கொண்டார். சினிமாப் பாடல்கள் என்றால் என்ன, பக்திப் பாடல்கள் என்றால் என்ன அவற்றை இசைத் தட்டுக்களிற் பதிவு செய்து இசை இரசிகர்களுக்கு விற்பனை செய்வார்கள். இசை இரசிகர்கள் பலர் சாமுவேல் உபாத்தியார் வீட்டில் இரவிலே கூடிப் பாட்டுக்களைக் கேட்பார்கள். இதைவிட துவிச்சக்கரவண்டி இலங்கைக்கு வந்த காலத்திலேயே முதன் முறை ஒரு வண்டியைச் சொந்தமாக வாங்கி வைத்திருந்தார். தையல் இயந்திரம் ஒன்றையும் சொந்தமாக வாங்கி வைத்திருந்து உடுப்புக்கள் தைப்பார். ஹார்மோனியம் என்ற இசைக் கருவியும் அவரிடம் இருந்தது. பொழுது போக்காகத் தானே பாடி வாசித்துக் கொண்டிருப்பார். அடிக்கடி வெற்றிலை சுவைத்துக் கொண்டிருப்பார். சுங்கான், சுருட்டு என்பனவும் புகைத்துக் கொண்டிருப்பார். தன்னை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வார். சுவர்க்கடிகாரம், மேசையில் வைக்கும் மணிக்கூடு, கையிற் கட்டியிருக்கும் மணிக்கூடு என்பவற்றையும் வாங்கி வைத்துக் கொண்டார். இவைகள் யாவற்றையும் திருத்தக்கூடிய ஆற்றல்கள் இவருக்கு நிறைவாக இருந்தது. இவர் சுதந்திரமாகத் தன் வாழ்வை நடத்த வேண்டும் என்ற ஆசை இருந்தது. தென்னிலங்கை வாழ்வு அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. தென்னிலங்கை மக்களுடன் மிகச் சரளமாகச் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பேசிக்கொண்டார். நேசம் படிப்பை முடித்து வீட்டு வீட்டுக் காரியங்களில் ஈடுபடலானா. ஆச்சிக்குட்டியிலும் பாக்கச் சிறந்த குணாதிசயங்கள் அவவிடம் இருந்தன. ஆச்சிக்குட்டியிலும் பார்க்க அவ அழகான பெண்ணாகக் காணப்பட்டா. பெரிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்குரிய குணங்கள் யாவும் நிறைவாகக் காணப்பட்டன. அரியம் ஒரு துடிதுடிப்பான ஒருவராக வளர்ந்து வந்தார். அழகான ஓர் ஆண் மகன், மக்கள் பார்வையில் வசீகரமான ஒருவராக விளங்கினார். கல்வித் துறையில் மாத்திரமல்ல விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினார். தேசிய விளையாட்டுக்களில் மாத்திரமல்ல உதைபந்தாட்டத் துறையில் ஓர் அபாரமான விளையாட்டு வீரன், பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி தென்னிலங்கையை நோக்கிப் படிப்பிக்கச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசெப்பு கணபதிப்பிள்ளை குடும்பம்

இவர் சுதந்திரமான மனிதனாக வாழத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டார். இதனால் இவர் மெதடிஸ்த கட்டுக்கோப்பிலிருந்து சற்று விலகி வாழ்ந்தார். விவசாயத் தொழிலை விரும்பிச் செய்து வந்தார். இசைத்துறையில் தன்னை வளம்படுத்தி ஒரு சிறந்த பாடகனாக வந்தார். இவரது ஆற்றல்களுக்குப் பொருத்தமான ஒரு துணைவி கிடைத்தபடியால் விசாயத் துறையில் வளம் பெற்றதுமன்றி இலங்கையிலே ஒரு சிறந்த இசைப் பரம்பரைக்கு வித்திட்ட பெருமையும் இவருக்கு உண்டு. இன்று இவரது சந்ததியில் வயதில் மூத்தவரும், கல்விமானும், சமயப் பெரியாரும், சமூகத்தொண்டரும், இளைப்பாறிய அதிபருமான த. இரத்தின உபாத்தியாயர் கரவெட்டியில் வாழ்ந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். கரவெட்டியில் ஒரு சைவ ஆதினம் இருக்குமாயின் அந்த ஆதீனத்தின் முதல்வராக இருக்கும் தகுதி அவருக்கு நிறைவாக உண்டு. இரத்தின உபாத்தியாரின் மூத்த மகள் பொறி இயலாளராக அவுஸ்திரேலியாவிலும், மகன் ஒருவர் வைத்திய கலாநிதியாக லண்டனிலும் பணி புரிகிறார்கள். மகள் ஒருவர் ஆங்கில ஆசிரியையாகக் கரவெட்டியில் உள்ள பாடசாலையிற் பணிபுரிகிறார். அண்ணாவி புதியார் இசைப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் வதிரி, கரவெட்டி, புத்தூர், சாவகச்சேரி போன்ற இடங்களிற் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களிற் பலர் கல்விமான்களாகவும், இசை மேதைகளாகவும், சைவசமயத் தொண்டர்களாகவும், சமூகத் தொண்டர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வதிரியில் இறுதியாக வாழ்ந்து மடிந்த குண்டுமணி அவர்கள் இலங்கையிலேயே ஒரு சிறந்த தவில் வித்துவானாகவும், ஹார்மோனிய வித்துவானாகவும், மிருதங்க வித்துவானாகவும், நாடக அண்ணாவியாராகவும் விளங்கினார். அவரது பிள்ளைகளும் இசை ஞானம் படைத்தவர்களாகவும், கல்விமான்களாகவும் இருக்கிறார்கள். குண்டுமணியின் இளைய சகோதரரான துரைராசா அவர்கள் இன்றும் நாதஸ்வரத்துறையிற் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். தோடி, கல்யாணி, மோகனம், ஹிந்தோளம் போன்ற இராகங்கள் வாசிப்பாராயின் இசை ரசிகர்கள் மயக்கமான நிலையில் இருப்பர். இவரது பிள்ளைகளும் இசைத் துறையில் தம்மை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலம் இலங்கையில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மாதம் ஒரு முறையாவது கச்சேரி செய்து வந்தார்கள். துரைராசா அவர்களுக்கு மிகுந்த கவலை உண்டு. தன்னோடு சேர்ந்து வாசிப்பதற்குப் பொருத்தமான சோடி இல்லாததுமாகும். இவருக்கு ஒரு மகள் இசைப்பட்டதாரியாகப் படிப்பித்துக் கொண்டிருக்கிறா. இவரது சகோதரரான ஐயாத்துரை அவர்களும் இசை ஞானம் படைத்தவர். இவரது மகளும் ஓர் இசைப்பட்டதாரியாகப் படிப்பித்துக் கொண்டிருக்கிறா. இவர்களது குடும்பத்தில் நவரத்தினம் ஆசிரியர் ஓர் இசை மாணிப்பட்டம் பெற்றவர். தனது சாரீர வளத்தினால் கர்நாடக இசையிலும், பண்ணிசையிலும் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பொறித்துள்ளார். தனது மூன்று பெண்பிள்ளைகளையும் இசைத் துறையிலும் கல்வித்துறையிலும் வளம்பெற வளர்த்தெடுத்திருக்கிறார். பல இசைக் கலைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் சென்று விட்டபடியால் ஒரு சிலரையே இங்கு குறிப்பிடலாம். நாதஸ்வரக் கலைஞனாகவும், நகைச்சுவை நடிகனாகவும் விளங்கிய நா. சின்னத்துரை, புதியார்க்குட்டி என்போரது நாதஸ்வர இசைக்குப் பல்கலைப் பண்டிதர் மு. கிருஷ்ணபிள்ளை அவர்கள் தவில் வாசித்து மங்கள நிகழ்வுகளை அலங்கரித்திருந்தனர். நாதஸ்வரக் கலைஞன் ஆனந்தராசா அவர்கள் தன்னைத்தானே வளம்படுத்தி கிராமங்களில் நிகழும் மங்கள நிகழ்ச்சிகளையும் கோயில் நிகழ்சிகளையும் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார். ஆங்கில ஆசிரியர் முருகேசு வேதாரணியம் அவர்களைப்பற்றியும் அவரது மைத்துனர் சங்கீத வித்துவான் கருணாகரனைப் பற்றியும் அதிகம் எழுதலாம். ஆனால் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் இசைக் கலைஞர்களைப் பற்றிய ஒரு தனி நூல் வெளியிட வேண்டிய அவசியத்தைப் பலர் கூறியிருக்கிறார்கள். அந்த நூலில் இவர்களைப் பற்றி விரிவாக எழுதுவார்கள் என நம்புகிறேன். என்றாலும் ஆசிரியர் வேதாரணியம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது அவரை இன்று ஒரு பிரபல ஆங்கில ஆசிரியர் எனப் பெருமையுடன் கூறுவதிலும் பார்க்கப் பிரபல பண்ணிசைப் பாடகன் எனக் கூறுவதோடு சிறு பராயந்தொட்டு இசைத்துறையில் தன்னைத் தானே வளம் பெறச் செய்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அடிக்கடி கச்சேரி செய்து இசை இரசிகர்களை மகிழ்வித்ததுமன்றி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தாரின் நன்மதிப்பையும் பெற்றவராவர். இவரைப்பற்றிக் காரைசுந்தரம்பிள்ளை அவர்கள் நடிகமணி வயிரமுத்து அவர்களைப் பற்றி எழுதிய நூலில் சங்கீத வத்துவான் மு.வேதாரணியம் என்றே குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சியான காரியமாகும். கருணாகரன் அவர்களைச் சிறுவயது தொடக்கம் இசைத்துறையில் நெறிப்படுத்தி இன்று பிரபல இசைமேதையாக உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு. கருணாகரனைப் பற்றி எழுதுவதற்கு எனக்கு தகுதி போதாவிட்டாலும் சில முக்கிய கருத்துக்களை மாத்திரம் குறிப்பிடலாம் என நினைக்கிறேன். ஓர் இசை மேதையின் வளர்ச்சிக்குப் பல பின்னணிகள் வேண்டும். முதலாவதாகக் குடும்பப் பின்னணியைக் கவனிக்கையில் அவரது தகப்பன் கந்தவனம் அவர்கள் தமிழக இசை நாடகக் கலைஞர்களோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்தவர். கந்தவனம் அவர்களின் தாயின் தந்தை கற்பர் உடையார் என அன்பாக அழைக்கப்பட்டவர்; அவரும் வதிரியில் ஓர் இசைப் பரம்பரையை உருவாக்குவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர். இரண்டாவதாகக் கருணாகரன் வாழ்ந்த சூழ்நிலை; கரவெட்டியில் சித்தந்தோட்டம் என்ற இடமும் அவர் இசைத்துறையில் வளர்ச்சியடையத் துணையாக இருந்தது, மூன்றாவதாக அவர் சிறுபாரயந் தொடக்கம் கல்வி கற்ற வதிரி மிஷன் பாடசாலை ஆசிரியர்களின் வழிநடத்தல், நான்காவது அவர் S.S.C படித்துக் கொண்டிருந்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர், பாட ஆசிரியர்கள், இசை கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோர் அவருக்களித்த உற்சாகம் இறுதியாகக் கூறினால் அவர் இராமநாதன் இசைக்கல்லூரியில் இசைமணிப் பட்டம் பெறுவதற்காகச் சென்றபோது அக்கல்லூரியின் அதிபரும் இசைப் பேராசிரியருமான சந்தானம் அவர்கள் குருவாகக் கிடைத்தது. சந்தானம் அவர்களின் வழிநடத்தலோடு தமிழகம் சென்று சங்கீத வித்துவான் பட்டம் பெற்றதும், சந்தானம் அவர்களின் தந்தையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுநாத ஐயர் அவர்களின் தொடர்பு கொண்டு அவரிடம் சிறந்த உருப்படிகளைக் கற்றுக் கொண்டதும், அவரது ஆசியைப் பெற்றதும் சந்தானம் அவர்களோடு இணைந்து கச்சேரி செய்ததுமான பின்னணிகள் அவரை ஓர் இசைமேதையாக ஆக்கியதில் வியப்பில்லை. என்றாலும் அவரோடு கதைக்கும் போது நான் ஒரு முறை "உங்களைப் போன்றவர்களின் சேவை இந்த மண்ணிலுள்ள பிள்ளைகளுக்குப் பயன்படுவதை நீங்கள் விரும்பவில்லையா?" எனக்கேட்ட போது அவரின் பதில் எனது உள்ளத்தை உருக்கியது. "எனக்கு நான்கு பெண்பிள்ளைகள் உள; அவர்களின் எதிர் காலத்துக்கு அதிகமாகச் சேமித்து வைக்க வேண்டும்; நான் கஷ்டப்பட்டது போல அவர்கள் கஷ்டப்படக் கூடாது; இந்த மண்ணிலுள்ள பிள்ளைகளை நான் நேசிக்கிறேன், மதிக்கிறேன்; ஆனால் இந்த மண்ணிலுள்ள பெரிய மனிதர் எனச் சொல்லப்படுபவர்கள் என்னை நேசிக்கிறார்களோ, மதிக்கிறார்களோ தெரியவில்லை" என்றார் கடவுளே மனித உருவெடுத்து யாழ்ப்பாண மண்ணில் வாழ்ந்து வந்தாலும் அவரை விளங்கவோ, அவரை நேசிக்கவோ, அவரை மதிக்கவோ யாழ்ப்பாண மக்கள் விரும்பவே மாட்டார்கள். மனிதனை மனிதன் நேசிக்க, மதிக்கத் தெரியாத மக்கள் கூட்டம் வாழ்கின்ற யாழ்ப்பாண மண்ணில் சைவமார்க்கமோ, கிறிஸ்தவ மார்க்கமோ அல்லது வேறெந்த மார்க்கங்களோ இருப்பதில் எதுவித அர்த்தமுமில்லை. சிங்கப்பூரில் இசைப்பணியைச் செய்து கொண்டிருக்கும் கருணாகரன் அவர்கள் அடிக்கடி தமிழகத்திலும், மலேசியாவிலும், அவுஸ்திரேலியாவிலும் சென்று கச்சேரி செய்து இசையைப் பரப்பிக் கொண்டிருப்பது எமக்கு மிகவும் பெருமையும், மகிழ்ச்சியும் உண்டு. "தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற கூற்றுக்கிணங்க அவரின் பணி தொடர்ந்து நிகழ அவரை வாழ்த்துகின்றோம். புத்தூர் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற பலரை மறந்திருந்தாலும் இன்றும் இசைத்துறையிற் பிரகாசித்துக் கொண்டிருக்கும் விரிவுரையாளர் பத்மலிங்கத்தைப் பற்றியும் அவரது தந்தை தவில் வித்துவான் சின்னத்தம்பி அவர்களைப் பற்றியும் அவரது மகன் தவிற் கலைஞன் திவ்வியநாயகத்தைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன். இசைமேதை பத்மலிங்கம் போன்ற ஒருவரை உருவாக்குவதற்குப் பல பின்னணிகள் இருந்தாலும் அவரது தந்தை சின்னத்தம்பி அவர்களே அவற்றுக்கெல்லாம் மூலைக்கல்லாய் அமைந்துள்ளார். தவிற் கலையில் குண்டுமணி அவர்கள் எவ்வாறு பிரகாசித்துக் கொண்டிருந்தாரோ அதே போன்று சின்னத்தம்பி அவர்களும் பிரகாசித்துக் கொண்டிருந்தார். அதிகமாகக் கச்சேரிகளிலே துரைராசா அவர்களோடு இணைந்து சபாரட்ணம் அல்லது அல்வாய் வடக்கு சின்னத்துரை அவர்கள் நாதஸ்வரம் வாசிக்கும் போது குண்டுமணி அவர்களும் சின்னத்தம்பி அவர்களும் இணைந்து தவில் வாசிப்பார்கள். இவர்களது கச்சேரி ஒலிபெருக்கியில் விழுந்து தூர இருப்பவர்களின் காதில் விழும்போது அவர்கள் "எங்கேயோ தமிழ்நாட்டிலிருந்து வந்த இசைக் கலைஞர்களின் கச்சேரி மாதிரியிருக்கிறது" எனக் கூறுவதுண்டு. சின்னத்தம்பி அவர்களின் தோற்றம் தவிற்கலைக்கு மிகப்பொருத்தமானதொன்றாக அமைந்தது. அதிக பருமனற்றதும், பொன்னிறமான அழகான மேனியையும் உடையவர். இன்னும் சிறப்பாகக் கூறின் அவரது ஒழுக்கமானதும் கட்டுப்பாடுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை அவரது தவிற்கலைக்குச் சிறப்பாக அமைந்தது. இன்று அவர் தவிற் கலையினின்று சற்று ஓய்வெடுத்துக் கொண்டாலும் தனது மகன் பத்மலிங்கம் அவர்களை இசை உலகில் பிரகாசிக்கச் செய்தது அவருக்கு மிகுந்த பெருமையை அளிக்கின்றது. மாத்திரமல்ல தனது மகன் ஒருவரைத் தவிற்கலையில் ஈடுபடச் செய்து தனக்கு வாரிசை ஆக்கிக் கொண்டதும் அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கலாம்.

பத்மலிங்கம் அவர்களைப் பற்றி எழுதுவதற்கு நான் தகுதியற்றவனென்றாலும் அவரைப் பற்றிச் சுருக்கமாக எழுதி என் ஆசையை நிறைவேற்றலாம் என எண்ணுகின்றேன். இவர் இன்று இசை உலகிற் பிரகாசித்துக் கொண்டிருப்பதற்கு இவரது தந்தை மூலகாரணமாக அமைந்தாலும் இவர் வாழ்ந்து வந்த பிரதேசம், இவர் இளம் வயதிற் படித்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் வழி நடத்தலும் ஒரு பின்னணியாக அமைந்திருந்தது. இராமநாதன் இசைக் கல்லூரியில் இசைமணிப் பட்டம் படிக்கச் சென்ற போது அவருக்கு வாய்த்த குருவும் பேராசிரியருமான சந்தானம் அவர்களின் வழிநடத்தல்களும் சிறந்த பின்னணியாக அமைந்ததில் ஆச்சரியமில்லை பின்னர் தமிழகம் சென்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சங்கீத பூஷணம் படித்துக் கொண்டிருக்கும் போது அவரது திறமைகளைக் கண்டறிந்த பேராசிரியர்களின் அன்பு, ஆதரவு, வழிநடத்தல் ஆகியன அவரை இன்னும் இசைத்துறையிற் பிரகாசிக்கச் செய்தன. அவரது கச்சேரிகள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் நிகழ்த்தப்பட்டு பல்லாயிரக் கணக்கான இரசிகர்களால் பாராட்டப்பட்டிருக்கிறார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறைப் பொறுப்பாளராகவும் இசைத்துறைத் தலைவராகவும் பொறுப்பேற்ற பின்னர் யாழ்ப்பாண இசை இரசிகர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றதுமன்றி அவரது மாணவ மாணவிகளின் பக்தி பூர்வமான அன்பையும் பெற்றிருக்கின்றார். பல இசைக் கலைஞர்கள் பணம் சம்பாதிக்கும் நோக்கோடு வெளிநாடுகளுக்குச் சென்றாலும் பத்மலிங்கம் அவர்கள் இந்த மண்ணிலுள்ள பிள்ளைகளுக்கு இசைப்பணி செய்வதற்குத் தன்னை அர்ப்பணித்தது அவரின் மண்பற்று, தியாக மனப்பாங்கு என்பவற்றைப் பிரதிபலிக்கச் செய்கிறது. யாழ்ப்பாண மண்ணில் அவர் செய்த பல இசைக் கச்சேரிகளைக் கேட்டு இரசித்திருக்கிறேன்; அவரைப் பாராட்டியிருக்கிறேன். கடைசியாக நாவலர் மண்டபத்தில் சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வருகை தந்த நூற்றாண்டு நினைவு விழாவை ஒட்டி இவரது கச்சேரி ஒன்று நடைபெற்றபோது நானும் சென்றிருந்தேன். கச்சேரி ஒரு புதுமையான வடிவத்தில் அமைந்திருந்தது. திறமான உருப்படிகள் அனைத்தையும் சுருக்கி ஒரு 'மினி' கச்சேரியாக அமைத்து முடித்து விட்டார். மண்டபத்தின் உள்ளே இருந்தவர்கள் எவரும் எழும்புவதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு இசைத் தாகம் தணியவில்லை. அடுத்த நிகழ்ச்சி ஆரம்பமாக இருக்கிறதென அறிவித்த பிறகே அவர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறிப் பத்மலிங்கம் அவர்களைப் பாராட்டச் சென்றார்கள். சந்தர்ப்பத்துக்கேற்றவாறு கச்சேரியைச் சுருக்கவோ விரிவாக்கவோ அவர் நன்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிக் கொண்டார். நல்லூர் உற்சவ காலத்திற் செய்யும் கச்சேரி ஒரு ரகமானது; அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தார் நடாத்தும் இசைவிழாவில் இன்னொரு ரகமாயிருக்கும்; விசேட கச்சேரியாக கைலாசபதி அரங்கு போன்ற இடங்களில் நடக்கும் கச்சேரி முழுமையான கச்சேரியாக அமையும். யாழ்ப்பாணம் இளங் கலைஞர் மன்றத்தூடாக பல இளம் இசைக் கலைஞர்கலைக் கச்சேரி செய்யக்கூடிய பயிற்சியை அளித்து வருகிறார். யாழ்ப்பாண மாவட்டத்தில் எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியிலும் இந்தத் தெய்வீக இசைப்பணியைச் செய்து கொண்டிருக்கும் பத்மலிங்கம் அவர்களைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சாவச்சேரியில் வாழ்ந்தவரும் இரத்தின உபாத்தியாரின் மைத்துனருமான வயிரமுத்து அவர்கள் ஒரு நாதஸ்வரக் கலைஞனாகவும், வயலின் இசைக் கலைஞனாகவும் வாழ்ந்து அந்தப் பிரதேசத்தில் நிகழ்ந்த மங்கள நிகழ்ச்சிகளை அலங்கரித்தார். அவருக்குத் துணையாகத் தவில் வாசித்தவர் அவரது மைத்துனர் நாராயணர் ஆகும். வயிரமுத்து அவர்களின் நான்கு பெண்பிள்ளைகளும் இசை ஞானம் நிறைந்தவர்கள். வயலின் வாசிப்பதில் நால்வரும் திறமைசாலிகளாக இருக்கின்றனர். நாராயணர் அவர்களின் ஆண்மக்கள் மூவரும் இசைத்துறையில் வல்லவாரயிருந்தனர். முத்தாலிங்கம் ஆசிரியர் அவர்கள் இசைத்துறையில் மாத்திரமல்ல சித்திரக் கலையிலும் மிகச் சிறந்து விளங்குகின்றார்.

விபுதராசா அன்னபூரணாதேவி அவர்களின் ஐந்து பிள்ளைகளும் வளர்ந்து வரும் இசைக் கலைஞர்களாக விளங்குகின்றார்கள். அதே போன்று வைத்தியர் சிவபுண்ணியத்தின் பிள்ளைகளும் வளர்ந்து வரும் இசைக் கலைஞர்களாய் இருக்கிறார்கள். வைத்தியர் சின்னப்புவின் மனைவி ஒரு வயலின் வித்துவானாக இருப்பது மகிழ்ச்சியான காரியமாகும். சாவகச்சேரியில் இன்னும் வளர்ந்து வரும் இசைக் கலைஞர்கள் தோன்றுவார்கள் என நம்புகிறேன்.

## பென்சமின் யோசேப் அலிஸ் குடும்பம்

யோசேப்பு உபாத்தியாயர் பாடசாலையைப் பொறுப்பேற்றதும் பாடசாலையின் கல்வித்தரம் உயர்ந்ததுமன்றி வகுப்புக்களும் கூடிக் கொண்டே சென்றன. இரு வருடங்களில் S. S. C வகுப்பு வைக்கப்பட்டது. கட்டைவேலிக்குச் செல்ல இருந்த பிள்ளைகள் இந்தப் பாடசாலையிலேயே தொடர்ந்து படித்தனர். வருடந்தோறும் அநேக மாணவர்கள் S. S. C சித்தியடைந்து மலைப் பிரதேசத்தில் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களாகப் பணி புரிந்து பின்னர் ஆசிரிய தராதரப் பத்திரம்பெற்ற ஆசிரியர்களாகவும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் வந்திருக்கிறார்கள்.

யோசேப்பு உபாத்தியாயருக்கு ஒரு துணைவி தேவைப்பட்ட போது நவாலி தெற்கைச் சேர்ந்த 'அலிஸ்' என்ற பெண் தெரியப்பட்டா. இவ உடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் கல்லூரியிற் கல்வி பயின்றவ. பக்தியான ஒரு கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவ. இவவும் மிஷன் பாடசாலையில் ஓர் ஆசிரியையாக நியமிக்கப்பட்டா. சண்முக உபாத்தியாயர், மாணிக்க உபாத்தியாயர் போன்றவர்களும் உதவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். தென்னிலங்கையிற் படிப்பித்துக் கொண்டிருந்த சாமுவேல் உபாத்தியாயரும் சில காலங்களின் பின்னர் இப்பாடசாலையின் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர்களுக்கு உதவியாக மு. கிருஷ்ணபிள்ளை, வ. துரைசுந்தரம், ஈ. இராசையா, ஐ. செல்லத்துரை என்போர் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை ஆற்றி வந்தார்கள். கலைத்துறையில் ஆற்றல்கள் நிறைந்த தொண்டர் ஆசிரியர்களின் வருகை பாடசாலையில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளுக்குப் பெரும் உதவியாக அமைந்தது மாத்திரமல்ல பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வட்டாரப் போட்டிகளுக்குப் பிள்ளைகளைப் பழக்கிப் பரிசுகளைப் பெறவும் உதவியாக இருந்தது. இவர்கள் இந்தப் பாடசாலையிற் படித்த காலத்திலேயே யோசேப்பு உபாத்தியாயரின் நாடகப் பட்டறையிற் பயிற்சி பெற்றவர்கள். இவர்களைத் தவிரத் தர்மலிங்க உபாத்தியாயர், அப்பையா உபாத்தியாயர், ஐயாத்துரை உபாத்தியாயர் என்பவர்களோடு பிற்காலத்தில் 'யமன் வேலுப்பிள்ளை' என்றழைக்கப்பட்ட வேலுப்பிள்ளை அவர்களும் யோசேப்பு உபாத்தியாயரின் நாடகப் பட்டறையிற் பயிற்சி பெற்றவராவர். யோசேப்பு உபாத்தியாயரின் காலத்தில் நூற்றுக் கணக்கான கிறிஸ்தவ நாடகங்களும், சமூக நாடகங்களும் அவராலே எழுதப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு அரங்கேற்றப்பட்டன. இந்த நாடகங்களில் இன்றும் பேசப்பட்டு வரும் சில நாடகங்களைக் குறிப்பிடலாம். ஆபிரகாமின் சரித்திரம், மோசேயின் சரித்திரம், யோசேப்பின் சரித்திரம், வீரகுமாரனின் சரித்திரம் போன்ற வரலாற்று நாடகங்களையும், கெட்டகுமாரன், சமாரியப் பெண், ஐசுவரியவான் லாசரு, நல்ல சமாரியன், காயீன் ஆபேல், தாவீது கோலியாத்து ரூத், எஸ்தர் போன்ற குறு நாடகங்களையும் அரங்கேற்றி யாழ் குடாநாட்டிலுள்ள திருச்சபைகளின் பாராட்டுக்களைப் பெற்றார். கடைசியாக இவர் அரங்கேற்றிய ஒரு சமூக நாடகம் "காந்தாமணி" ஆகும். இந்த நாடகத்தில் நடித்த பலர் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டிப் புலவரின் பிள்ளைகளாகிய பென்சமின் பசுபதி, டானியல் பண்டாரம், ஜோசேப் கணபதிப்பிள்ளை ஆகியோர் ஒவ்வொரு துறையிற் சிறந்து விளங்கினாலும் அவரது பேரனான யோசேப்பு உபாத்தியாயருக்கு இருந்த ஆற்றல்களே ஆண்டிப் புலவர் பரம்பரைக்கு மிகவும் பெருமையும் புகழும் அளித்தமை சிறந்த அம்சமாகும்.

## யேசுதாசன் குடும்பம்

யோசேப்பு அலிஸ் குடும்பத்தினருக்கு ஐந்து பிள்ளைகள் உள். மூத்தவர் யேசுதாசன் அவர்கள். இவர் ஒரு B.Sc பட்டதாரியோடு Dip-In -Education பட்டமும் பெற்றவர். இலங்கையிலுள்ள மிகச் சிறந்த பாடசாலைகளில் ஆசிரியராகப் பணி புரிந்திருக்கிறார். ஆனந்த சாஸ்திர வித்தியாலயம், றிச்மண்ட் கல்லூரி, St. Thomas கல்லூரி பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற் படிப்பித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நைஜீரியா சென்று சில காலங்கள் படிப்பித்துக் கொண்டிருந்தார். பின்னர் யூனஸ்கோ Scholarship ஒன்று கிடைத்து பாரீஸ் நகரிற் சில காலம் வேலை செய்தார். இவர் விவாகம் செய்த பெண் 'லில்லி'; இவ சீனிப்போல் என்பவரின் இரண்டாவது மகள்; இவவும் M.A. Dip. in. Education பட்டதாரி. இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் மூத்தவர் ஜோசெப் ஜெயராஜ்; ஒரு Ph-D Chemistry; இன்று யப்பானிய பல்கலைக்கழகம் ஒன்றில் Professor ஆகப் பணிபுரிகிறார். இரண்டாவது மகள் ஒரு M. Sc Maths பட்டதாரி; சில காலம் ஹொங்கெங் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியையாகப் பணிபுரிந்து வீட்டுக் கனடா பல்கலைக்கழகம் ஒன்றில் Ph-D க்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றா. இளையவர் கனடா பல்கலைக்கழகம் ஒன்றிற் பட்டப்படிப்புப் படித்துக் கொண்டிருக்கிறார். இவர்கள் குடும்பமாகக் கனடாவிலேயே தமது வாழ்க்கையை நிரந்தரமாக அமைத்துக் கொண்டார்கள்.

## குமாரதாஸ் குடும்பம்

யோசேப்பு அலிஸ் குடும்பத்தினரின் இரண்டாவது மகன் குமாரதாஸ்; ஒரு பொறியியலாளர். இலங்கையின் பல பாகங்களிலும் வேலை செய்துள்ளார்; பெருந்தெருத்திணைக்களத்தில் மிக உயர்பதவியை வகித்தவர். 'மார்லின்' என்ற பெண்ணை மணம் செய்து ஆறு பெண் பிள்ளைகளினதும் ஓர் ஆண் பிள்ளையினதும் தந்தையானதிற் பெரும் மகிழ்ச்சியடைந்தார். மகிழ்ச்சியான பெற்றார்; மகிழ்ச்சியான பிள்ளைகள்; மகிழ்ச்சியான வாழ்வே ஜீவியத்தின் நோக்கம் என்ற கொள்கையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். எல்லாப் பிள்ளைகளும் நன்கு படித்தவர்கள். மகன் பொறியியல் பட்டதாரியாக கனடா பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து வெளியேற இருக்கிறார். முதல் ஐந்து பிள்ளைகளும் குடும்ப வாழ்வுக்குட் பிரவேசித்து விட்டனர். அவர்களிற் சிலருக்குப் பிள்ளைகளும் உண்டு. கனடாவிலேயே தம் வாழ்வை நிரந்தரமாக அமைத்துக் கொண்டார்கள்.

## தேவமலர் அரியரத்தினம் குடும்பம்

தேவமலர் அவர்கள் யோசேப்பு உபாத்தியாயர் குடும்பத்தின் ஒரே ஒரு மகள். பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலே படித்த பின்னர் பல்கலைக்கழகம் சென்று B.A பட்டம் படித்து முடித்து படித்த அதே கல்லூரியில் ஆசிரியையாகச் சேவையாற்றிக் கொண்டிருந்தா. சில வருடங்களின் பின் பட்டப் பின் படிப்பாகிய Dip-in-Education பட்டத்தைக் கொழும்பு பல்கலைக் கழகத்திற் படித்து வீட்டுத் திரும்பவும் அதே கல்லாரியில் ஆசிரியையாகச் சேவையாற்றினா. 1956ம் ஆண்டளவில் இலங்கை வங்கியில் வேலை செய்து கொண்டிருந்த திருவாளர் சாம் அரியரட்ணம் அவர்களை விவாகம் செய்தா. சுமார் பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் கடவுளின் ஈவாக ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தா. அவவே 'மலரினி' தேவமலர் அவர்கள் சேவையினின்று ஒய்வெடுக்க முன்னர் மெதடிஸ்ற் பெண்கள் உயர் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினா. தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோசெப் அவர்களின் கலை ஆற்றல் அவவிடம் நிறைவாகக் காணப்பட்டன. பாடசாலையில் நடக்கும் எந்த நிகழ்ச்சியும் அவவின் நெறிப்படுத்தலிலும், மேற்பார்வையிலும் நடந்தேறியதில் ஆச்சரியமில்லை, அவவின் சிறந்த ஆற்றல்களுக்கு அரசாங்கம் அவவுக்கு Girls Guid Commissioner ஆகப் பதவியைக் கொடுத்து அவவைக் கௌரவித்தது. திருவாளர் அரியரட்ணம் அவர்கள் வங்கி முகாமையாளராக இலங்கையின் வட பகுதியிலுள்ள எல்லா இலங்கை வங்கிக் கிளைகளிலும் வேலை செய்த பின்னர் மாவட்ட முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியிற் கடமையாற்றி ஓய்வு பெற்றார். மலரினி அரியரட்ணம் அவர்கள் இலண்டன் பல்கலைக் கழக B.Sc Computer பட்டதாரிப் பட்டம் பெற்று இன்று கொழும்பில் வேலை செய்து கொண்டிருக்கின்றா. கொழும்பிலேயே தம் வாழ்வை நிரந்தரமாக அமைத்துக் கொண்டு அமைதியாகக் கடவுளுக்குள் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## பரமதாஸ் லில்லி குடும்பம்

பரமதாஸ் அவர்கள் யோசேப்பு உபாத்தியார் குடும்பத்தின் நான்காவது மகன். ஒரு B.Sc பொறியியல் பட்டதாரி, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் அதி உயர் பதவியை வகித்தவர். நைஜீரியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிற் சில காலம் வேலை செய்தார். அவரைச் சந்தோஷமாக வைத்திருக்கக் கூடிய வீடயங்கள் எதுவுமே அங்கே இல்லை என்றார். தொடர்ந்தும் இலங்கையில் வந்து சேவையாற்றினார். இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள. மூத்த இருவரும் விவாகம் செய்து லண்டனில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கடைசி மகள் ஒரு பட்டதாரி ஆசிரியையாகப் படிப்பித்துக் கொண்டிருக்கின்றா.

பரமதாஸ் அவர்கள் இறுதியில் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் தலைமைப் பணியகத்தில் உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றி இளைப்பாறினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தின் Quarters (பங்களா)விலேயே இளைப்பாறிய பின்னரும் வாழ்ந்து வந்தார். அரசாங்கம் அவரிற் கொண்ட நன் மதிப்பென்றே நினைக்கிறேன். அவரது நண்பர்கள், உறவினர்கள் அவரது வாழ்வைப் பற்றிக் கூறுகையில் ஓர் இனிமையற்ற வாழ்வெனலாம்; ஆனால் ஒரு விளையாட்டு வீரனாயிருந்த அவருக்கே தன்னை எவ்வாறு மகிழ்ச்சியாக வைத்திருக்கலாம் என விளங்கும். பல வருடங்களாகக் குடும்ப வாழ்விலிருந்து தன்னைத் தனிமைப் படுத்தி வாழ்ந்து இன்று இறைவன் மடியில் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

## சத்தியதாஸ் பிறின்சி குடும்பம்

யோசெப்பு உபாத்தியார் குடும்பத்தின் கடைசி வாரிசு. ஒரு B.Sc Maths பட்டதாரி; வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வெளிவாரிப் பட்டப் பிரிவில் ஆசிரியராகப் பல காலங்களாகப் பணிபுரிந்தார். கல்கத்தாப் பல்கலைக்கழகம் ஒன்றில் Stats பட்டம் பெறுவதற்காக ஒரு வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கல்லூரியின் Scholarship பெற்றுப் படித்து முடிந்த பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே படிப்பித்துக் கொண்டிருந்தார். யாழ்பல்கலைக்கழகம் திருநெல்வேலியில் நிறுவப்பட்ட போது யாழ்பாபாணக் கல்லூரியிலிருந்து ஆசிரியர்கள் சிலரும் நூல் நிலையத்தின் ஒரு பகுதியும் இணைந்து வழங்கப்பட்டது. ஆசிரியர்களில் சத்தியதாஸ் அவர்களும் ஒருவராக விளங்கினார். சில காலங்கள் அங்கு படிப்பித்து ஓய்வெடுத்த பின்னர் தனது வீட்டிலும் Tuition Centres களிலும் Stats என்ற பாடத்திலும் Computer என்ற பாடத்திலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறார். இன்று கொழும்பிலே வாழ்ந்து கொண்டிருந்தாலும் அதே பணியைச் செய்து கொண்டிருக்கிறார். தன்னை எந்த நேரமும் தனது குடும்பத்துக்கும் மற்றவர்களுக்கும் சேவை செய்வதில் ஆயத்தமாக வைத்துக் கொள்வார். எந்தப் பெரிய பதவியிலுள்ளவர்களையும் தனது கெட்டித்தனத்தால் மடக்கிக் கொள்ளக் கூடிய வல்லமையுடையவர். எவருக்கும் தீங்கின்றித் தனக்கென ஒரு வாழ்வைச் சிறப்பாக அமைத்துக் கொண்டவர். இவற்றுக்கெல்லாம் மூல காரணமாகத் திகழ்பவர் அவரது மனைவி பிறின்சி அவர்களே இரண்டு ஆண் மக்கள் உளர்; மூத்தவர் 'அலென்' அடுத்தவர் 'சூட்டி' இருவரும் Computer துறையில் ஈடுபட்டுள்ளனர். 'அலென்' லண்டனில் படித்துக் கொண்டிருக்கிறார்; சூட்டி மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டிற் படித்துக் கொண்டிருக்கிறார். மகா விவேகிகள்; துணிச்சற்காரர்; தன்னம்பிக்கை நிறைந்தவர்கள்.

## சேரா அம்மா டேவிட் ஆறுமுகம் குடும்பம்

சேரா அம்மா பென்சமின் பசுபதி அவர்களின் இரண்டாவது பிள்ளை. இவவுக்குக் கலியாணப் பேச்சுக்கள் ஆரம்பமானபோது பலர் முன்வந்தாலும் எவரும் கிறிஸ்தவ மதத்துக்கு மாறி வரவிரும்பவில்லை. வதிரி மோட்டன்சீமா குடும்பத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் கிறிஸ்தவனாக மாறிக் கலியாணம் செய்ய விரும்பினார். அவர் கிறிஸ்தவ பெரியார்களோடு அதிமாகப் பழகுபவர்; அட்வக்கேற் நைல்ஸ், புறக்ரர் போல் அவர்களோடு நெருக்கமாக பழகுபவர்; அவர் ஊர் அப்பக்காத்து வேலை பார்ப்பவராகையால் அவர்களை அடிக்கடி சந்திப்பவர். அதனால் அவர் கிறிஸ்தவனாக மாறுவதில் வெட்கப்படவில்லை. பென்சமின் பசுபதி குடும்பத்தினருக்கு ஒரு மருமகனாக வருவதற்கோ அல்லது யோசேப்பு உபாத்தியாயரின் மைத்துனராக வருவதற்கோ அவருக்கு நிரம்பிய தகுதிகள் இருந்தன. சித்த ஆயுர் வேத வைத்தியராகவும் விளங்கினார். மன்னார், பூநகரி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் ஏராளமான வயல் நிலங்களும் இருந்தன. இவரது மைத்துனர் கட்டையடி வயிரமுத்து என்பவர் இவரோடு இணைந்து வயல் நிலங்களை மக்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்து வயல் செய்வித்து வந்தனர். சோதிடம், கைரேகை சாத்திரம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கினார். டேவிட் என்ற கிறிஸ்தவ பெயர் சூட்டப்பட்டு டேவிட் ஆறுமுகம் அவர்களுக்கும் சேரா அம்மா அவர்களுக்கும் கிறிஸ்தவ முறைப்படி ஆலயத்திற் திருமணம் நடந்து முடிந்தது. வதிரியில் பண்டாராச்சீமா என்ற காணியின் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் வீடு கட்டித் தனிக் குடும்பமாக வாழ்ந்து வந்தனர். டேவீட் ஆறுமுகத்துக்கு இரு சகோதரிகள் இருந்தவர்கள்; அவர்களும் இவர்களுக்குத் துணையாக வாழ்ந்து வந்தனர். டேவீட் ஆறுமுகம் சேரா அம்மா அவர்களுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். ஞானம்மா, றோசம்மா, போல், நைல்ஸ், ஞானம்மா உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும், உடுவில் மகளிர் கல்லூரியிலும் கல்வி கற்று முடிந்த பினனர் டேவீட் ஆறுமுகத்தின் சகோதரியின் மகனான கட்டையடி வயிரமுத்து சின்னத்தம்பிக்கு விவாகம் செய்து வைத்தார். காலகதியில் றோசம்மாவும் சாவகச்சேரியில் வாழ்ந்து அங்கேயே விவாகம் செய்து தன் வாழ்வை அமைத்துக் கொண்டா. தங்கரத்தினம், அன்னபூரணாதேவி, இரவீந்திரன் ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். போல் அவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறி கந்தப்பளையிலுள்ள "கொட்லொட்ஜ" என்ற தோட்டத்திலுள்ள ஒரு பாடசாலையில் நியமனம் பெற்று ஒரு வருடம் சேவையாற்றிய பின்னர் கொட்டாஞ்சேனை கதீட்றல் கல்லூரியில் தமிழ்த் துறைக்குப் பொறுப்பாளராகப் பதவீ ஏற்றார். போல் அவர்கள் சந்தனவடிவு என்ற பயிற்றப்பட்ட ஆசிரியையை மணம் புரிந்து கதீட்றல் கல்லூரியிலேயே இருவரும் படிப்பித்துக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு அன்பழகன், இரஞ்சிதம் ஆகிய இரு பிள்ளைகள் பிறந்தனர். திருமதி சந்தனவடிவு போல் அவர்கள் வதிரி வடக்கு மிஷன் பாடசாலைக்கு மாறி வந்தபோது அந்த இடத்துக்கு பயிற்றப்பட்டிருந்த நைல்ஸ் புதிய நியமனம் பெற்றுச் சென்றார். நைல்ஸ் வேம்படியிற் படிப்பித்துக் கொண்டிருந்த ஜோய்ஸ் தையல்முத்து என்ற ஆசிரியையைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஜோண்சன் மோஹனதாஸ், ஜட்சன் கிருபாஹரன், ஜென்றசன் தயாபரன், சாறா ஜெயநிதி, டேவீட்சன் ஜீவநாதன் ஆகிய ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். ஜோண்சன் மோஹனதாஸ் 'றீசெற்' என்ற பெண்ணை விவாகம் செய்து இரு பிள்ளைகள் பிறந்தார்கள் 'அஷான் டேவீஸ்' என்பது மகனின் பெயர், 'ஜோய்சி' என்பது மகளின் பெயர் இவர்கள் தெஹிவளையில் 'கௌடான காடின்' என்ற இடத்தில் தமது வாழ்வை அமைத்துக் கொண்டார்கள்.

## விக்ரோறியா குணம் கந்தையா குடும்பம்

விக்ரோறியா குணம் பென்சமின் பசுபதி குடும்பத்தின் மூன்றாவது பிள்ளை. இவவும் தன் படிப்பை மிஷன் பாடசலையிலேயே முடித்து வீட்டு வீட்டுக் காரியங்களைக் கவனித்து வந்தார். இவவுக்கு ஒரு கலியாணம் தேவைப்பட்ட போது கந்தையா அவர்கள் முன்வந்தார். இவரது தோற்றத்தை வேதத்தில் வருகின்ற ஒரு வீர பாத்திரத்தின் நினைவு வருகிறது. 'சாம்சன்' என்ற நியாயாதிபதி, கவர்ச்சியான வீரத் தோற்றம். பென்சமின் பசுபதி குடும்பத்தினருக்கு ஒரு மருமகனாக வருவதற்கு அவருக்குத் தகுதிகள் இருந்தன. வதிரியைச் சேர்ந்தவர்; இராசம், துரை அவர்களின் சகோதரன். யாழ்ப்பாணம் ப.நோ. கூ. சங்கங்களின் சமாசத்தில் உணவு வீநியோகப் பிரிவில் மேற்பார்வையாளராகப் பதவீ வகித்தவர். ஆண்டி வளவிலேயே தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர். குணசிங்கம் என்ற ஆண்பிள்ளைய்யும் இரத்தினாம்பாள் என்ற பெண் பிள்ளையையும் பெற்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணசிங்கம் தங்கரூபம் என்ற பெண்ணை விவாகம் செய்து அருள்நிதி என்ற அருந்தவப் புதல்வியைப் பெற்று நன்றாகப் படிக்க வைத்து இன்று யாழ்மாவட்ட சுகாதாரத்திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவில் ஒரு 'குமாஸ்தா' வாகப் பணி புரிகின்றா. குணசிங்கம் அவர்கள் அறுபதாவது அகவைக் கடந்தாலும் கொழும்பிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனத்தில் வேலை செய்கின்றார். இருபத்து மூன்று வயதில் புறக்கோட்டையிலுள்ள ஒரு புடவை வர்த்தக நிறுவனத்தில் ஓர் English Typist ஆக வேலை செய்ய ஆரம்பித்த அவர் இன்று வர்த்தகத் துறையில் எல்லாப் பிரிவுகளிலும் சரளமாக வேலை செய்யக்கூடிய ஆற்றல்களைப் பெற்றுள்ளார். இவரை இந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு மூல காரணமாயிருந்தவர் 'ஜேம்ஸ்' அவர்களே. அவர் கொழும்பில் வாழ்ந்து வரும் இடத்தை ஓர் "Employment Exchange" என்று கூறுவார்கள். வேலையற்ற வாலிபர்கள் வேலை எடுத்துத் தரும்படி தம்மைப் பதிவு செய்து கொள்வார்கள். பல வாலிபர்கள் அவராற் பயன் அடைந்துள்ளார்கள். 'குணமாமா' என்று எல்லாரும் அன்பாக அழைத்துக் கொள்வார்கள். அவரில் ஓர் உற்சாகமான ஆவி தொழிற்பட்டுக் கொண்டிருப்பதை நான் அறிந்தேன். அதைக் 'கடவுளின் வல்லமை' என்று சொல்வதைப் பார்க்கிலும் "The Power of God" என அழைப்பது மிகவும் பொருத்தமாகும். விக்டோறியா குணத்தின் மகன் எனச் சொல்வதோ? பென்சமின் பசுபதி குடும்பத்தின் பேரன் எனச் சொல்வதோ? பீற்றர் ஆண்டி குடும்பத்தின் 'பீட்டன்' எனக் கூறுவதோ? எப்படிக் கூறினாலும் பீற்றர் ஆண்டி பரம்பரையின் ஓர் ஒளிச் சுடர் தென்னிலங்கையிற் பிரகாசித்துக் கொணடிருப்பது எல்லாருக்கும் மகிழ்ச்சியான காரியமாகும்.

இரத்தினாம்பாள் தங்கரூபத்தின் சகோதரனான மஹேஸ்வரன் அவர்களை விவாகம் செய்து மகிழ்ராஜன், மாதினி ஆகிய பிள்ளைகளைப் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நிலவளம், நீர் வளம் நிறைந்த ஒரு பிரதேசத்தில் ஓர் அழகான வீட்டை அமைத்து மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள். மஹேஸ்வரன் அவர்கள் பலதுறைகளில் நிறைவான வளம் பெற்றவராயிருந்தார். மூன்று சகோதரிகளுக்கு அண்ணராயிருந்தவர். மிகப் பொறுப்புணர்வுடன் தனது சகோதரிகளை நல்வாழ்வுக்குட் புகுத்தியது மாத்திரமல்ல தனது குடும்பத்தையும் சிறப்பாக நடத்தி வருகிறார். ஓர் ஆசிரியராகவோ, அதிபராகவோ கடமையாற்றித் தன் வாழ்வை வளமாக அமைத்துக் கொண்டார் என்று சொல்வதிலும் தனக்குக் கிடைத்த நீர் வளம், நில வளம் என்பவற்றைப் பயன்படுத்தி ஒரு சிறந்த விவசாயியாகத் தன்னை மாற்றித் தன் குடும்பத்தை வளம் படுத்திக் கொண்டார். என்று சொல்வது சிறப்புடையது என நம்புகிறேன். வதிரியிலுள்ள நிறுவனங்கள் யாவும் நேர்மையாகவும் ஒழுங்கு முறையாகவும் நடத்தப்பட வேண்டும என்ற ஆர்வம் உள்ளவர். நிறுவனங்களில் ஊழல்கள், அநீதிகள் காணப்படுவதை அவர் விரும்புவதில்லை. இன்று எல்லா நிறுவனங்களும் சுத்திகரிக்கப்பட்டு ஒழுங்கு முறையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என அறியும் போது மகிழ்ச்சி அடைகிறோம். மஹேஸ்வரன் அவர்களுக்கு இயல்பாக நிறைந்த ஆற்றல்கள் இருந்தன. இவற்றை நல்வழிப்படுத்திச் சமூகத்திற்கு பரவ விடுவதற்கு இவருக்குப் பல பின்னணிகள் இருந்தன. முதலாவது கற்பர் உடையாரின் பீட்டன் என்பதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுடன் கூறலாம்; இரண்டாவதாக அவரைப் பெற்றெடுத்து வளர்த்த பெற்றார்; மூன்றாவதாக அவர் உயர் கல்வி கற்ற நெல்லியடி ம.மகாவித்தியாலய அதிபர் கலாநிதி சிவப்பிரகாசம் அவர்களும் மற்றும் பாட ஆசிரியர்களும்; நாலாவதாக அவர் ஆசிரிய பயிற்சி பெற்ற பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை; இறுதியாக அவரைப் பல துறைகளிலும் பயிற்சி அளித்த தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மூ.சி. சீனித்தம்பி அவர்களும் சக ஆசிரியர்களும் ஆகும். இரத்தினம்பாள் இன்றும் ஒரு மெதடிஸ்ற்றாக இருப்பதுவும், ஆலயப் பணிகள், சமூகப் பணிகள் செய்வதும், தனது பிள்ளைகள் இருவரையும் மிகவும் அன்பாக வளர்த்துப் படிக்க வைத்ததுவும் ஒரு தாய்க்கு இருக்க வேண்டிய சிறப்பம்சங்களாகும். மகிழ்ராஜன் ஒரு கணக்காளராகப் பதவி வகிப்பதும், மாதினி யாழ் பல்கலைக் கழகப் பட்டதாரியாக வெளியேறி உடுப்பிட்டி மகளிர் கல்லாரியிற் படிப்பித்துக் கொண்டிருப்பதும் பெற்றாருக்குப் பெருமை அளிப்பதில் ஆச்சரியமில்லை.

## ஜேம்ஸ் பிலோமினா குடும்பம்

ஜேம்ஸ் அவர்கள் பென்சமின் பசுபதி குடும்பத்தின் கடைசிப் புதல்வன். யோசேப்பு உபாத்தியாரின் கணிதத் திறமை இவரிலும் நிரம்பக் காணப்பட்டது. மிக இளம் வயதிலேயே அரசாங்க ஆசிரியராகத் தென்னிலங்கையிற் படிப்பிக்க ஆரம்பித்தவர். தென்னிலங்கையிலேயே தனக்கு ஒரு துணைவியையும் தேடிக் கொண்டார். பிலோமினா அவர்களின் தந்தை 'கொறேறா' என்பவர்; இவரும் ஓர் ஆசிரியர்; கொச்சிக்கடையில் 'துவான' என்ற பிரதேசத்தில் 'கொறேறா' குடும்பத்தினர் வாழ்ந்து வந்ததுமன்றி அங்கே உள்ள ஒரு தமிழ்ப் பாடசாலையிலேயே 'கொறேறா' அவர்கள் ஒரு தமிழ்ப் பண்டிதராகப் படிப்பித்துக் கொண்டிருந்தார். நூற்றுக்கு நூறு வீதமானோர் கத்தோலிக்க மதத்தவர்களாகவும் தமிழ்மொழி பேசும் மக்களாகவும் காணப்படுவது அப்பிரதேச மக்களின் மொழிப்பற்றை எடுத்துக் காட்டா நிற்கின்றது. 1956க்குப் பின்னர் சிங்கள மொழி மூலம் கற்பிக்கப்படும் பாடசாலைகளாக மாறியதும் பிள்ளைகள் படிப்படியாகச் சிங்கள மொழி மூலமாக கற்கத் தொடங்கிவிட்டனர். 'துவானப் பிரதேசத்திலிருந்து அநேக அருட் தந்தையர்களும், அருட் சகோதரிகளும், அருட் சகோதரரும் உருவாக்கப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கத்தோலிக்க திருச்சபைகளிலும், கன்னியர் மடங்களிலும், பாடசாலைகளிலும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். ஜேம்ஸ் குடும்பத்தினர் தென்னிலங்கையிலுள்ள அரசினர் முஸ்லீம் பாடசாலைகளில் சேவையாற்றியிருக்கிறார்கள். இவர்களுக்கு அன்ரனி இரட்னராசா, கொட்வ்றி புஸ்பராசா, வெனன்சியூஸ்வரதராசா, ஜோசேப் அருள்ராசா ஆகிய நான்கு ஆண் பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்த பிள்ளை பிறந்து சில மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்து ஜோசேப்பு உபாத்தியாருக்குப் பிள்ளையைக் காட்டுவதற்காகக் கொண்டு சென்றனர். ஜோசேப்பு உபாத்தியார் குழந்தையைக் கையில் ஏந்தி தாலாட்டுப் பாடல் ஒன்றைப் பாடினார்.

"ஆண்டிப் புலவர் குலம் அம்புவியில் ஓங்கிடவே
வேண்டும் இரத்தினராஸ் விண்ணொளியே கண்வளராய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது முதலாவது அடி; இன்னும் ஐந்து அடிகள் பாடி நீர்கொழும்பு திரும்பும் போது அந்தப் பாடல்களை ஒரு கடதாசியில் எழுதிக் கொடுத்தார். ஆண்டிப் புலவர் குடும்பத்தின் புகழ் இந்த உலகம் பூராகவும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையைத் தனது பாடலின் மூலம் காட்டியிருக்கிறார். இரத்தினராசா அவர்கள் நீர்கொழும்பு St Marys கல்லூரியில் S.S.C சித்தியடைந்து பின்னர் கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள St. Benedicts கல்லூரியில் H.S.C படித்து சித்தியடைந்து, ஒரு வருடம் மட்டில் உனுப்பிட்டி அரசினர் தமிழ்ப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் 'Pharmacy' படிக்கச்சென்று விட்டார். Pharmacy Course படித்து முடித்த பின்னர் பதுளை அரசினர் வைத்தியசாலையில் முதல் நியமனம் பெற்று அங்கு சில வருடங்கள் சேவையாற்றிய பின்னர் சிலாபம் அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றம் பெற்று அங்கு வேலை செய்தார். இவர் தனது தாயின் நெருங்கிய சொந்தக்காரப்பெண் ஒருவரை விவாகம் செய்தார். இரு பிள்ளைகள் பிறந்தனர். மூத்தவர் G.C.E A/L சித்தியடைந்த பின்னர் இன்று கொழும்பில் Shipping Company ஒன்றிற் கடமையாற்றுகின்றார். அவரின் சகோதரி G.C.E (A/L) சித்தியடைந்த பின்னர் "Computer Course" செய்து கொண்டிருக்கிறா. இரத்தினராசா அவர்கள் றாகமம் அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு பல வருடங்கள் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது அவர் நித்திய வாழ்வுக்குட் பிரவேசிக்க வேண்டி நேரிட்டது. அப்போது அவருக்கு வயது நாற்பத்தேழு. ஜேம்ஸ் குடும்பத்தினரின் இரண்டாவது மகன் Godfrey Pushparajah அவர்கள் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகப் பல வருடங்கள் மணற்சேனை அரசினர் தமிழ்ப் பாடசாலையிற் கடமையாற்றிய பின்னர் தோப்பு அரசினர் தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். அவர் வத்தளையைச் சேர்ந்த ஒரு பெண்ணை விவாகம் செய்து ஒரே ஒரு பெண்பிள்ளைக்குத் தந்தையாய் இருக்கும் பெருமையைப் பெறுகின்றார். பிள்ளை G.C.E A/L சித்தியடைந்த பின்னர் 'Computer Course' செய்து கொண்டிருக்கின்றா.

ஜேம்ஸ் குடும்பத்தினரின் மூன்றாவது மகன் வெனன்சியூஸ் வரதராஜா அவர்கள் நீர்கொழும்பு St. marys கல்லூரியின் உயர்கல்வியை முடித்துக் கொண்டு கொழும்பிலுள்ள பிரபல Company ஒன்றில் வேலை செய்து கொண்டு வருகிறார். இவர் நீர்கொழும்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை விவாகம் செய்து ஒரே ஒரு பெண்பிள்ளைக்குத் தந்தையாகும் பெருமையைப் பெறுகிறார். பல நாடுகளுக்கு வர்த்தக நோக்காகச் சென்று வர்த்தக நுட்பங்களைப் பயின்று தனது Company க்கு நற்பெயர் பெற்றுக் கொடுத்துள்ளார். Company முதலாளிக்கு இவரில் ஒரு தனிப் பற்று. "எனது Company யின் Lucky Person" எனச் சொல்வார். ஒரு Car ஐ அவருக்குக் Company யின் சார்பாக முதலாளி அன்பளிப்புச் செய்திருக்கிறார். வர்த்தகத்துக்குப் பொருத்தமான 'Atractive Personality' அவருக்கு உண்டு.

ஜேம்ஸ் குடும்பத்தினரின் கடைசி மகன் ஜோசேப் அருள்ராஜா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G.C.E A/L Maths திறமையாகச் சித்தியடைந்த பின்னர் I.C.M.A என்ற Accountancy பரீட்சையிற் சித்தியடைந்து ஒரு Tea Company யில் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கேயே வேலை செய்து கொணடிருந்த பெண்ணை விவாகம் செய்ய நேரிட்டது. அவ கொழும்பு கொட்டாஞ்சேனையில் வாழ்ந்து வந்த காசிச்செட்டி குடும்பத்தினரின் ஒரு மகள். காசிச்செட்டி அவர்கள் Colombo Tobacco Company யில் பெரிய பதவி வகித்தவர். வெள்ளைக்காரக் Company யில் வேலை பாாத்தபடியால் அவருக்கெனத் தனித்துவமான ஒரு Personality காணப்பட்டது. பக்தியான குடும்பத்தினர். மிக அன்பான குடும்பத்தினர்; அவர்கள் இருவரும் ஒரே நாளில் மகிமைப் பிரவேசம் அடைந்தனர். கனடா, லண்டன், அவுஸ்திரேலியா போன்ற இடங்களில் இருந்து பிள்ளைகள் வர இருந்தமையால் ஒரு கிழமை மட்டில் அவர்களுடைய உடல்கள் நல்லடக்கத்துக்காகக் காத்துக் கிடந்தன. ஜோசேப் அருள்ராஜா குடும்பத்தினர் ஜேம்ஸ் பிலோமினா குடும்பத்தினரின் இல்லத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள் தாய் இவர்களோடேயே வாழ்ந்து வருகின்றா. ஜோசேப் அருள்ராஜா குடும்பத்தினருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள். மகா விவேகம் படைத்தவர்கள்; நல்ல குழப்படிகாரருமாவர். ஒரு Car சொந்தமாக வாங்கி வைத்திருக்கிறார்; ஒரு Motor Bicycle ம் உண்டு. தாயை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கும், Pension எடுக்கச் செல்வதற்கும் Car பயன் படுத்தப்படுகிறது. மகிழ்ச்சியான ஒரு குடும்பம்.

## டானியல் பண்டாரம் குடும்பம்

டானியல் பண்டாரம் பீற்றர் ஆண்டியின் இரண்டாவது மகனாவர். இவர் தகப்பனைப் போன்றே நகைச் சுவையாகக் கவிதைகள் பாடுவார். இவரது பல கவிதைகள் நான் சிறுவனாயிருந்த போது அவரிடம் படித்தவர்கள் பாடிக் காட்டுவார்கள். அப்பாக்குட்டி, கனகர், வெற்றிவேல், பெருமாள், முருகர் போன்ற பெரியோர்கள் எம்மைச் சந்திக்கும் போது அவருடைய கவிதைகளைப் பாடுவார்கள். ஆண்டி வளவின் அயல் வீட்டைச் சேர்ந்தவர்கள் தையல் ஊசி ஒன்றை வாங்கி அதைத் திருப்பிக் கொடுக்க மறந்து விட்டார்கள். பண்டாரச் சட்டம்பியார் ஒரு கவிதையைக் கடதாசியில் எழுதி இருவரிடம் ஓர் உலக்கையையும் கவிதைத் துண்டையும் கொடுத்தனுப்பினார். அவர்கள் கவிதையைப் படித்து உலக்கை கொண்டு வந்தவர்களையும் பார்த்து வெட்கம் அடைந்தவர்களாய் மன்னிப்புக் கேட்டு ஊசியைக் கொண்டு வந்து கொடுத்தனராம் "ஆண்டி மகன் பண்டாரம் அடுத்த 'வேலாத்தை' வீட்டில் வேண்டி வந்த பழம் ஒன்று வெள்ளழுகல்" இதுவும் ஒரு கவிதை பல பல கவிதைகள் கோவைப் படுத்தி வைத்திருந்தேன்; இடப்பெயர்வின் போது எல்லாம் அழிந்து விட்டன. பண்டாரச் சட்டம்பியாருக்கு மூன்று பிள்ளைகள் உள்; சாமுவேல், நேசம், அரியம். சாமுவேல் உபாத்தியாயர் தென்னிலங்கையிற் படிப்பித்துக் கொண்டிருக்கும் போது அதே பாடசாலையிற் படிப்பித்துக் கொண்டிருந்த 'கிறேஸ்' அம்மையாரை விவாகம் செய்ய வேண்டி நேரிட்டது. நேசம் டானியல் முருகேசு என்ற கற்பர் உடையாரின் மகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகம் செய்தா. இவர்களுக்கு வேதநாயகம் என்ற ஓர் ஆண் பிள்ளை பிறந்தது. சாமுவேல் உபாத்தியாயர் விவாகம் செய்த பினனர் வதிரிப் பக்கம் வருவதை நிறுத்தி விட்டார். தாய் ஆச்சிக்குட்டிக்கு மிகுந்த கவலையளிக்கவே மருமகன் டானியல் முருகேசுவைத் தென்னிலங்கைக்கு "சாமுவேலையும் அவரது மனைவியையும் கையோடு கூட்டி வாருங்கோ; இங்கே இருவரும் படிப்பிக்கலாம்" என அவரிடம் கூறி அனுப்பி விட்டா. சில நாட்களின் பின்னர் மூவரும் வதிரியை வந்து சேர்ந்தார்கள். சாமுவேல் உபாத்தியாயரும் மனைவி 'கிறேஸ்' அம்மையாரும் சில காலம் கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிற் படிப்பித்த பின்னர் சாமுவேல் உபாத்தியாயர் வதிரி வடக்கு மெ.மி பாடசாலையிற் படிப்பிக்கத் தொடங்கினார். சில காலத்தால் 'கிறேஸ்' அம்மையாருக்கு கண்ணில் ஏற்பட்ட சுகயீனம் காரணமாக படிப்பித்தலை நிறுத்தி விட்டா. நேசம் சில காலங்களால் நித்திய வாழ்வுக்குட் பிரவேசிக்க வேண்டி ஏற்பட்டது. சில காலங்களால் டானியல் முருகேசு அவர்களுக்கு அடுத்த விவாகப் பேச்சுக்கள் நடைபெற்று தேராரிவளவைச் சேர்ந்தவவும் சீனி, சவலை ஆகியோரின் சகோதரியுமான தங்கத்தை விவாகம் செய்தார். வேதநாயகம் பேத்தியாருடன் வளர்ந்து வரலானார். டானியல் முருகேசு தங்கம் ஆயியோருக்க வேதாரணியம் என்ற ஆண்பிள்ளை பிறந்தது. சில வருடங்களின் பின்னர் தங்கம் இவ்வுலகதினின்றும் எடுத்துக் கொள்ளப்பட்டா. வேதாரணியத்தைப் பராமரிப்பது டானியேல் முருகேசு அவர்களுக்கு கஷ்டமாயிருந்தது; மூன்றாவது விவாகம் செய்ய விரும்புகிறார் என்று கேள்விப்பட்டதும் கரவெட்டி அண்ணாவியார் குடும்பத்தைச் சேர்ந்த 'நயிலாம்புசம்' என்ற பெண் முன்வந்தா. சித்தந்தோட்டம் என்ற காணியின் ஒரு பகுதியில் வீடொன்றமைத்து வாழ்ந்து வந்தனர். நயிலாம்புசம் டானியல் முருகேசு தம்பதியினருக்கு இன்று ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் உளர். மகள் மலர் என்பவ அமரசிங்கம் குடும்பத்தின் ஒரு மகனை விவாகம் செய்து 'ஸ்விஸ்' சில் வாழ்ந்து வருகின்றா. மூத்த மக்களாகிய வேதாபரணம், கற்பநாயகம் என்போர் முறையே வதிரியிலும், கரவெட்டி இல்லத்திலும் வாழ்ந்து வருகின்றனர். வேதாபரணம் 'கிராம சேவகர்' ஆக கரவெட்டி பிரதேச செயலகத்தின் நெல்லியடி கிராமசேவகர் பிரிவில் வேலை செய்கிறார். இவர் வதிரியில் விவாகம் செய்து அங்கேயே வாழ்ந்து கொண்டு வருகிறார். மூத்த மகன் லண்டனில் படித்துக் கொண்டிருக்கிறார். மகள் கௌசல்யா யாழ் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவில் நடனம் பயின்று கொண்டிருக்கின்றா. இவா் நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையில் அங்கத்தவராயிருக்கிறார். 'கிறிக்கற்', உதைப்பந்தாட்டம் கரபந்தாட்டம், ஆகிய விளையாட்டுக்களைச் சர்வசாதாரணமாக விளையாடிக் கொண்டிருப்பது மாத்திரமல்ல மத்தியஸ்தராகவும் கடமையாற்றுகின்றார். கற்பநாயகம் குடும்பத்தினர் "பெந்தக்கோஸ்தே" சபையைச் சேர்ந்தவர்கள். கற்பநாயகம் வர்த்தகத்துறையில் தனக்கெனச் சொந்தமான வர்த்தக நிறுவனம் ஒன்றை இயக்கி வருகின்றார். வித்தியாதரன், தேவாபரணம், தேவநேசன் ஆகியோர் குடும்பமாகவே அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றனர். டானியல் முருகேசு அவர்கள் நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையின் அங்கத்தவராய் மக்களுக்கும் , கடவுளுக்கும் நற்சாட்சியுள்ள மனிதனாக வாழ்ந்து நித்திய வாழ்வுக்குட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசித்தார். வேதாரணியம் அவர்கள் ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியருமாவர். இயல்பாகவே இசைஞானம் பெற்றவர்; பாடுவதிலும் தன்னைத் தானே வளம் படுத்திக் கொண்டவர். இவர் 'இராசேஸ்வரி' என்ற பெண்ணை வீவாகம் செய்து இரண்டு பெண்பிள்ளைகளையும் இரண்டு ஆண்பிள்ளைகளையும் பெற்றெடுத்தனர். 'ரதி' மதியூகநாதன் அவர்கள் ஒரு பாடகி மாத்திரமல்ல, நடனக்கலையிலும் சிறந்து விளங்குகிறார். 'கலைவாணி' புஸ்பராசன் அவர்கள் ஒரு வயலின் இசைப் பட்டதாரி, பாட்டு, நடனம் ஆகியவற்றிலும் சிறந்த ஞானம் உண்டு. பாரதிதாசன் ஒரு 'வீடியோ' கலைஞன்; 'நேரு' ஒரு மெக்கானிக் கலைஞன்.

## வேதநாயம் தங்கம்மா குடும்பத்தினர்

வேதநாயம் அவர்கள் அரசாங்க வைத்தியசாலைகள் பலவற்றில் வேலை செய்திருக்கிறார். மக்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்பு அவருக்கு நிறைய இருந்தது. இவர் ஈ.வெற்றிவேல் அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளான தங்கம்மா அவர்களை வீவாகம் செய்தார். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள் உளர். மூத்தவர் 'யேசுராசரஞ்சன்', மந்திகை அரசினர் வைத்தியசாலையில் 'Lab'ல் வேலை செய்கிறார்; இவரது மனைவி புவனம் அதே வைத்தியசாலையில் 'தாதி' யாக வேலை செய்கின்றா, இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உளர். மூத்தவ பெண்பிள்ளை, மற்றவர்கள் மூவரும் ஆண்கள். படித்துக் கொண்டிருக்கிறார்கள். வேதநாயகம் குடும்பத்தின் இரண்டாவது மகள் சத்தியவதி; இவ தம்பர் புஸ்பத்தின் மகனான தேவதாசன் அவர்களை வீவாகம் செய்தார். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள் உளர். 'ஆன் சுதர்சனி', ஜஸ்மிலா ஜென்சி, சிறோமி சரண்யா, தர்ஷன், கடைசியாக ஒரு பெண் குழந்தை உண்டு. தேவதாஸ் அவர்கள் கடிகாரங்கள் திருத்துபவர். வேதநாயகம் குடும்பத்தின் மூன்றாவது மகன் யேஸ்வரன் தவராசா; மந்திகை அரசினர் வைத்தியசாலையிற் பணி புரிகின்றார்; இவர் ஒரு ஹோமியோபதி வைத்தியருமாவர். இவர் "கம்பர்மலையைச்" சேர்ந்த ஒரு பெண்ணை வீவாகம் செய்துள்ளார். நாலாவது மகள் 'கிருபை நேசகுமாரி'; வதிரியைச் சேர்ந்த தேவமோகன் என்பவரை வீவாகம் செய்து, இன்று கொழும்பிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றா; இவரது கணவன் 'தேவமோகன்' மத்தியகிழக்கு நாடொன்றில் வேலை செய்கின்றார். ஐந்தாவது மகள் சாம் நேசகுமார்; இலங்கை வங்கியின் காங்கேசன் துறைக்கிளையிற் கடமையாற்றுகின்றார்; இவர் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை வீவாகம் செய்தார்; இவ ஓர் ஆசிரியை; இவர்களுக்கு ஒரு குழந்தை உண்டு.

டானியல் பண்டாரம் குடும்பத்தின் கடைசி மகனான 'அரியம்' ஆசிரியர் அவர்களைப் பற்றிய தகவல்கள் கிடையாத படியால் அவரைப் பற்றி எழுத வீரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளையாச்சி வயிரமுத்து குடும்பம்

இளையாச்சி அவர்கள் பார்வதி, ஆச்சிக்குட்டி அவர்களின் இளைய சகோதரி ஆவர். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உளர்; தங்கம், கிருஷ்ணபிள்ளை, சின்னத்துரை என்போர் தங்கம் சண்முக உபாத்தியாரை விவாகம் செய்து மடத்துக் கடவையில் வாழ்ந்து வந்தனர். இரண்டாவது மகன் கிருஷ்ணபிள்ளை புகையிரதத் திணைக்களத்தில் வேலை செய்தார்; இவர் சண்முக உபாத்தியாரின் சகோதரி சித்திரம் என்ற பெண்ணை விவாகம் செய்தார். இவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. சின்னத்துரை ஆசிரியர் இளையதங்கம் என்ற பெண்ணை விவாகம் செய்து புதிய சோனாவளவில் வாழ்ந்து பின்னர் தங்கமால் என்ற வீட்டைக் கட்டி அங்கே குடியமர்ந்தனர். சண்முக உபாத்தியாயரின் ஒரு சகோதரியான 'பாக்கியம்' என்ற பெண்ணை மாணிக்க உபாத்தியாயர் விவாகம் செய்தார். சன்முக உபாத்தியார் தங்கம் குடும்பத்தினருக்கு இரு ஆண்மக்கள், சத்தியநாதன் என்போர். மாணிக்க உபாத்தியாருக்கு இரு பெண்மக்கள்; நேசமலர், சுகிர்தமலர் ஆவர். நேசமலர் கிறிஸ்தாஸ் அவர்களை விவாகம் செய்து நேசராஜன் என்ற பிள்ளையைப் பெற்றவுடனேயே தாய் நித்திய வாழ்வுக்குட் பிரவேசித்து விட்டா. நேசராஜன் இருபத்தேராவது வயதில் சலப்பை வருத்தமாக நித்திய வாழ்வுட் பிரவேசித்து விட்டார். சுகிர்தமலர் அருமைலிங்கம் என்ற 'Station Master' ஒருவரை விவாகம் செய்து ஐந்து பிள்ளைகளைப் பெற்றனர். அருமைலிங்கம் ஓய்வு பெற்றபின்னர் நித்திய வாழ்வக்குட் பிரவேசித்து விட்டார். சின்னத்துரை இளையதங்கம் குடும்பத்தினர் மூன்று பிள்ளைகளைப் பெற்றனர். நேசமணி, தேவமணி, தேவகுமார் ஆவர். கிறிஸ்ததாஸ், சின்னத்துரை இளையதங்கம் குடும்பத்தினரின் மூத்த புதல்வியான நேசமணியை விவாகம் செய்து ஏழு பிள்ளைகளைப் பெற்றனர். சுபாஷினி, சுகந்தினி, ராஜ்குமார், சுதாமினி, ரஞ்சித்குமார், லலிதா, ரமேஷ் ஆகியோர். சுபாஷினி, செல்வராசா என்பவரை விவாகம் செய்து ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றனர். ராஜ்குமார் ஏற்கனவே ஜேர்மனி சென்று வேலை செய்து கொண்டிருக்கிறார். மற்றவர்கள் பெற்றோருடன் வதிரி தங்கமாலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சின்னத்துரை உபாத்தியாரின் மகன் தேவகுமாரன், அரியாலையைச் சேர்ந்த பிரபல கட்டிடக் கொன்றாக்ரரான மயில்வாகனம் அவர்களின் ஒரு மகளான ஆனந்தி என்ற பெண்ணை விவாகம் செய்தார். இவர்களுக்கு 'அஸ்வினி' என்ற ஒரு பெண்பிள்ளை உண்டு. இவர்கள் கனடாவில் வாழ்ந்து வருகின்றனர். தேவமணி, மனோகர் என்பவரை விவாகம் செய்து மயூதரன், மனோஷா, மாருசி என்ற பிள்ளைகளைப் பெற்றனர். மனோகர் 'சுவிஸ்' நாட்டில் வேலை செய்து கொண்டிருக்கிறார். சுகந்தினி பரமதாஸ் அவர்களுக்கு இரு ஆண்குழந்தைகள் உண்டு. இம்மானுவேல் நர்மதன், பரமசுதன் என்போராவர். இவர்கள் கிறிஸ்ததாஸ் – நேசமணி தம்பதிகளின் முதற் பேரப்பிள்ளைகளாகும். ஆபிரகாமின் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பல்கிப் பெருகினது போல கிறிஸ்ததாஸ் – நேசமணி குடும்பத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்ததியினர் பல்கிப் பெருக வேண்டுமென வாழ்த்துகிறேன். சுகந்தினி பரமதாஸ் என்பவரை விவாகம் செய்து ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றார்.

சண்முக உபாத்தியார், மாணிக்க உபாத்தியார் குடும்பங்கள் "மடத்துக் கடவை" என்ற அன்னசத்திரத்தில் வாழ்ந்து வருடம் தோறும் நத்தார், வருடப்பிறப்பு போன்ற கொண்டாட்டங்களிலே ஏழைகள், அநாதைகள், விதவைகள், முதியோர் போன்றவர்களுக்கு உணவு, உடை வழங்கி மக்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வார்கள். சின்னத்துரை உபாத்தியாயரும் மனைவி இளையதங்கமும், பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி, நத்தார், வருடப்பிறப்பு, ஈஸ்ரர் போன்ற கொண்டாட்டங்களிலே புத்தாடை தைத்து மக்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வார்கள். சண்முக உபாத்தியார், மாணிக்க உபாத்தியார், சின்னத்துரை உபாத்தியார் அவர்கள் சமூகப் பணியை எவ்வளவு சிறப்பாகச் செய்தார்களோ சமயப் பணியையும் சிறப்பாகச் செய்தார்கள். அவர்களைப் போன்றே கிறிஸ்தாஸ், சத்தியநாதன் அவர்களும் சமூக, சமயப் பணிகளைச் சிறப்பாகச் செய்து கொண்டு வருகிறார்கள். நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையின் வரலாற்றிலே இதுவரை குருத்துவப் பணி செய்ய எவரும் முன்வந்ததில்லை. சத்தியநாதன் அவர்களின் மகன் சத்தியராஜ் அவர்களுக்கு கடவுளின் அழைப்புக் கிடைத்திருக்கிறது என்பதை அறியும் போது நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

## கிறிஸ்ரீனா சதாசிவம் குடும்பம்:

இக் குடும்பத்தினர்வதிரியில் மெதடிஸ்த குடும்பத்தினராயிருப்பது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். சதாசிவம் அவர்கள் வதிரியைச் சேர்ந்தவர்; ஆண்டி வளவுக்கு மிக அருகில் வசிப்பவர். கிறிஸ்ரீனா அவர்கள் நாயன்மார்கட்டிலே ஆபிரகாம் யோகம்மா குடும்பத்தினரின் மகள். இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தைச் சேர்ந்தவ. வின்சிலோ போதகர் அவர்களின்நற்செய்திப் பணியாலும வழிநடத்தலாலும் ஓட்டுமட மெதடிஸ்த ஆலயத்தின் அங்கத்தவரானா. சதாசிவம் அவர்கள் நவாலி தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி அவர்களுடன் கட்டிடம் கட்டும்வேலையைச் செய்து வந்தார். நவாலி தெற்கைச் சேர்ந்தவர்கள் பலர் தென்னிந்திய ஐக்கிய திருச்சபையைச் சேர்ந்தவர்கள். சதாசிவம் அவர்கள் ஒரு மிருதங்கக் கலைஞன், நவாலி ஆலயத்தினர் தமது ஆலயத்தில் நிகழும் விசேட நிகழ்ச்சிகளுக்கும், சனிக்கிழமை தோறும் நடக்கும் பாடற் பயிற்சிகளுக்கும் மிருதங்கம் வாசிப்பதற்காக சதாசிவம் அவர்களைப் பாவிப்பார்கள்; நவாலியூர் நா.செல்லத்துரை அவர்கள் வயலின் வாசிப்பார். இதனால் சதாசிவம அவர்கள் ஆலய நிகழ்வுகளிற் பங்கு பற்றும் வாய்ப்புக் கிடைத்தது. ஆலயத்தில் நிகழும் பக்திபூர்வமான ஆராதனை இவரை வெகுவாய்க் கவர்ந்தது. இவர் அந்த ஆலயத்திலேயே ஞானஸ்நானம், திடப்படுத்தல் ஆகிய சமய சடங்காசாரங்களை நிறைவேற்றிக் கொண்டு அதே ஆலயத்தின் அங்கத்தவராகப் பல காலம் இருந்திருக்கிறார். வின்சிலோ போதகர் அவர்கள் சதாசிவம் கிறிஸ்ரீனா அவர்களின் விவாகத்தை யாழ்ப்பாணம் பரிசுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதுரு ஆலயத்தில் நிகழ்த்தி வைத்தார். சில காலங்களின் பின்னர் வதிரியிலேயே தமது வாழ்வை நிரந்தரமாக்கிக் கொண்டனர். இவர்களுக்கு இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர்; சத்திய நிர்மலன், சத்தியசுதன். சத்திய நிர்மலன்இளம் வயதிலேயே நித்திய வாழ்வுக்குட் பிரவேசிக்க நேரிட்டது; சுத்தியசுதன் வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருக்கிறார். சதாசிவம் அவர்களுக்கு இசைஞானம் உண்டு. ஒரு காலம் யோசேப்பு உபாத்தியாயர் அவர்கள் சில பிள்ளைகளைச் சங்கீதம் படிப்பதற்காக யாழ்ப்பாணம் பட்டினப் பகுதியில் வாழ்ந்த பரம்தில்லைராசா என்ற இசைப்பட்டதாரியிடம் சேர்த்து விட்டார். அவர்களுள் சதாசிவம், சிவலிங்கம், வேதாரண்யம், பாலசிங்கம் என்போரை நினைவிருக்கிறது. சதாசிவம் அவர்களின் ஆசை – ஆலயத்தில் நிகழும் ஆராதனை, அதிற் பாடப்படும பாடல்கள்யாவும் பக்தி பூர்வமாக அமையவேண்டும்; ஒளிவிழா, ஈஸ்ரர்,கறோல் நிகழ்வுகள் யாவும் அமைதியாக நடைபெற வேண்டுமேயன்றி 'முசுப்பாத்தி' யாக இருக்கக் கூடாது" என்பதாகும். அவரை நெல்லியடி மெதடிஸ்த திருச்சபை பாவித்தால் நல்ல பயனை அடையலாம் என நம்புகிறேன்.

## முடிவுரை

மெதடிஸ்த நற்செய்திப் பணியாளர்கள் இங்கிலாந்திலிருந்து இலங்கையை நோக்கிப் பாய்க் கப்பலிற் புறப்பட்டனர். இடையிற் சிலர் கப்பலுக்குள்ளேயே மகிமைப் பிரவேசம் அடைந்து விட்டார்கள். மிகுதிப் பேர் தொடர்ந்து பிரயாணம் செய்து இலங்கைக் கரையை 1814ம் ஆண்டு அடைந்து பின்னர் எல்லாரும் கொழும்பிற் கூடித்தாம் செய்யப் போகும் நற்செய்திப் பணியைப் பற்றி ஒரு திட்டத்தை வகித்தனர். தாம் இலங்கையை அடைந்து விட்டோம் என்றும், இனிச் செய்யவேண்டிய காரியங்கள் எவை என்பதையும் இங்கிலாந்திலுள்ள மெதடிஸ்த திருச்சபையின் தலைமையகத்துக்க அறிவித்தனர். 1816ம் ஆண்டு நற்செய்திப் பணியாளர்கள் தெற்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும், வடக்கு நோக்கியும் அனுப்பப்பட்டார்கள். ஏற்கனவே 'கத்தோலிக்க திருச்சபையும்,டச்' திருச்சபையைச் சேர்ந்தவர்களும் நற்செய்திப் பணியைச் செய்து ஆலயங்களையும், அமைத்துக் கொண்டிருக்கையில் மூன்றாவது திருச்சபைப் பணியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து நற்செய்திப் பணியைச் செய்ய முன் வந்தது மக்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. வட,கீழ் மாகாணங்களைப் பொறுத்த வரையில் ஆதிகால முதல் சைவ மதமே இருந்து வந்தது; யாவரும் சைவத் தமிழ் மக்களாகவே வாழ்ந்து வந்தனர். ஒரே இனம், ஒரே மதம்; ஒரே கலாச்சாரம் என்றெல்லாம் இருந்த மக்கள் சமுதாயத்தில் மார்க்க பேதங்கள் ஊடுருவல் செய்வதைத் தமிழ்ச் சமுதாயம் விரும்பாவிட்டாலும் ஒரு சிலர் தமது சுயநன்மைக்காக மனமாற்றம் இன்றி மதமாற்றம் அடைந்தார்கள். வந்தவர்கள் கல்விப் பணி, வைத்தியப் பணி, வேலை வாய்ப்புப் பணி போன்றவற்றைச் செய்தாலும் மக்களிடத்தில் பூரணமான மனமாற்றமோ, மதமாற்றமோ நிகழவில்லை என்பதை நற்செய்திப் பணியாளர்கள் விளங்கிக் கொள்ளாமல் இல்லை. 1816ம் ஆண்டு இலங்கையின் வடபகுதி நோக்கி வந்தவர்கள் யாழ்ப்பாண சேகரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பணியை 1834ம் ஆண்டே ஆரம்பிக்க முடிந்தது. யாழ் மத்தியகல்லூரி 1834ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்படியே வேம்படி மகளிர் கல்லூரி, St. Peters Church போன்றவைகள் படிப்படியாகவே ஆரம்பிக்கப்பட்டன. பருத்தித்துறை – கட்டைவேலி சேகரத்தைப் பொறுத்தவரையில் 1850ம் ஆண்டு பிந்தியே பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த சேகரத்தில் சுமார் பத்துத் தமிழ்ப் பாடசாலைகளும், இரண்டு கல்லூரிகளும் நிறுவினார்கள். இவற்றில் ஆகப் பிந்தி நிறுவப்பட்டது வதிரி மெதடிஸ்த தமிழ்ப் பாடசாலையாகும். நற்செய்திப் பணியாளர்கள் கல்விப்பணியைப் பற்றி அங்கு வாழ்ந்த சைவ மக்களிலும் பார்க்க முந்திச் சிந்தித்து விட்டதே ஒரு நன்மையாகும். ஆங்கிலக் கல்லூரிகளிற் சேர்ந்து ஆங்கில மொழிமூலம் கல்வி கற்ற சிலர் அரசாங்க நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெற்றார்கள். காற்சட்டை, சப்பாத்து, ரை, கோற் ஆகிய மேற்கத்திய கலாச்சாரத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர்களைக் கண்ணுற்ற போது சைவத் தமிழ்க் கலாச்சாரத்தில் ஊறிப்போன மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. கிறிஸ்துவின் போதனைகளை மக்களுக்குக் கூற வந்த நற்செய்திப் பணியாளர்கள் இந்த நாட்டு மக்களின் மொழி, மதம், கலை, கலாச்சாரம் ஆகியவற்றிற் சிக்கல்களை ஏற்படுத்தி விட்டார்கள். ஏற்கனவே இன, மத, மொழி, கலாச்சார வேறுபாடுகளாற் சிக்குண்ட மக்களுக்கு, புதிய மதம், புதியமொழி, புதிய கலாச்சாரம் என்பவற்றாற் சிக்கல் அடைந்ததில் ஆச்சரியமில்லை. வதிரியிலுள்ள மக்களோ அல்லது அதைச் சூழவுள்ள கிராமங்களில் வாழ்கின்ற மக்களோ கிறிஸ்தவர்களாக மாறாமல் விட்டதில் ஆச்சரியமில்லை ஏற்கனவே சைவசமயத்தில் இருந்து ஒரு வித நன்மையுமற்று வாழ்ந்த மக்களுக்கு ஒரு புதிய மதத்தைப் பின்பற்றுவதில் வெறுப்பு ஏற்படத்தான் செய்யும். மார்க்க வழிபாடுகளும், சடங்காசாரங்களும், மூடப்பழக்க வழக்கங்களும் மார்க்கத்தை வர்த்தக மயமாக்கும் காரணிகளாக இருக்கின்றனவே அன்றி பக்தி உணர்வோடு செயற்படும் ஏதுக்களாகத் தெரியவில்லை. இவ்வாறு தொடர்ந்து மார்க்கங்கள் இருக்குமேயாயின் காலகதியில் மக்களுக்கு மார்க்கத்தில் வெறுப்பை ஏற்படுத்தி மக்கள் தமது பகுத்தறிவைப் பயன்படுத்தி நன் மக்களாக வாழ்வது மிகப் பிரயோசனமாயிருக்கும் என எண்ணுவார்கள். "மார்க்கம்மனிதனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டதே அன்றி மார்க்கத்துக்காக மனிதன் சிருஷ்டிக்கப்படவில்லை." என்பதை மக்கள் உணரவேண்டும். ஆண்டவர் எருசலேம் நகரத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார் என அறிகிறோம. அவர் எருசலேம் தேவாலயத்திற் பிரவேசித்து அங்கே விற்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் புறம்பே துரத்தத் தொடங்கி "என்னுடைய வீடு ஜெப வீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது. நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" என்றார். (லூக்கா 19:41–46). அன்று தொட்டு இன்று வரை ஆலயங்கள் வர்த்தக நிலையங்களாகவே காணப்படுகின்றன. ஆலய வழிபாடுகளில் நிகழும் நிகழ்வு ஒவ்வொன்றும் புனித மயமாக்கப்படவேண்டும். பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையும் புடமிடப் பட்டாதாயும், பாடுகிற பாட்டுக்கள் இனிமையாகவும், இசை பிசகாது, தாளம் தவறாது இருக்க வேண்டும். ஆராதனையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வும் நன்றாக ஆயத்தப்படுத்த வேண்டும். பிரசங்கம் பதினைந்து நிமிடங்களுக்குட் செய்தாலும் சபையாருக்க மனதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான பதிவை ஏற்படுத்தி ஆன்மாவைக் கடவுளண்டை திருப்பக் கூடியதாயிருக்க் வேண்டும். கிழக்காசிய கலாச்சாரத்தைப் பின்னணியாகக் கொண்டு ஆராதனைகளை நடத்த வேண்டும். தேவாரம், கூட்டுப்பிரார்த்தனை முறைகளையும் பின்பற்ற வேண்டும். வாத்தியக் கருவிகள் பாட்டுக்களுக்குப் பயன்படுத்த வேண்டும். ஆராதனை முழுவதும் பக்தி மயமாகவே அமையவேண்டும். ஆராதனை முடிந்து சபையார் வெறுமனே செல்லாமல் ஆன்மீக நிறைவோடு செல்ல வேண்டும்.

டேவிட் நைல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் – II

### என் மனதில் நிலைத்தவர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் எமது சமுதாயத்தில் மிகச் சிலரே. அவ்வாறு வாழ்ந்த பெருந்தகைகளுள் திரு ஆறுமுகம் டேவிட் போல் அவர்களும் குறிப்பிடக் கூடியவர். அவர் ஆடையும் வெண்ணிறமானது; அவர் செயல்களும் தூய்மையானது. அதனாற்றான் ஆசிரியராயும், கனிஷ்ட அதிபராயும், பின்னர் இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருவருடங்களும், வதிரி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் பத்து வருடங்களும் அதிபராய்க் கடமை புரிந்தார். அதிபராயும் கடமை புரிந்துள்ளார். எமது சமுதாய விழிப்புணர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வழி காட்டியவர். மெதடிஸ்த திருச் சபையின் வளர்ச்சிக்குப் பல கோணங்களிலும் உறுதுணையாக நின்றவர். நிமிர்ந்த பார்வையும் சீரிய தோற்றமும் கொண்டு பார்ப்பவர் மனதில் சுலபமாக உயர் அந்தஸ்தைப் பெற்றவர். கல்விச் சமுதாயத்துக்குத் தான் உழைத்ததும் அல்லாமல் அதிபர் தரத்தில் ஒரு மகளையும் அவருக்கு உற்ற துணையாக அதிபர் தரத்தில் ஒரு மருமகனையும் உருவாக்கியவர். இவரால் கல்விச் சமுதாயமும், மெதடிஸ்த திருச் சபையும் பெருமையுற்றது. இவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் இவரின் புகழ் உடல் எம்மிடையே மாட்சிமையோடு தோற்றம் தருகிறது.

லயனல் திலகநாயம் போல்
'சங்கீத பூஷணம்'
'ஸ்வரராக லய வீநோத சுரபி'
உதவிக் கல்விப் பணிப்பாளர் கல்விவலயம் I
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனதரும் ஆசான்

அந்த நாள் ஒரு திங்கள் டாங்.....டாங்......டாங்..... கொழும்பு கொட்டாஞ்சேனை கதீட்றல் கல்லூரி தனது முதலாம் பாட முடிவு மணியை அடித்து முடிக்கிறது. "எல்லோரும் அமைதியாயிருங்கள்; Sir வருகிறார். கண்டிப்பானவர் தெரியும் தானே?" எமது வகுப்பின் தலை மாணவனுடைய இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து வகுப்பில் மயான அமைதி. Sir வந்து விட்டார்.

"வணக்கம் Sir"

"வணக்கம் அமருங்கள்"

எல்லோரும் ஒழுங்காக அமர்கிறார்கள்; நானும் தான். "கடந்த வெள்ளிக்கிழமை நாங்கள் படித்த றொபேர்ட் புறூஸ் (Robert Bruce) என்ற ஸ்கொற்லன்ட் (Scotland) மன்னனின் வரலாற்றைச் சுவைத்தீர்கள். அது முடிந்ததும் அடுத்த பாடத்தின் "நான் செத்த பிறகு வா" என்ற தலைப்பு வசனம் உங்கள் கவனத்தை ஈர்த்து விட்டதை சாந்தனும் இன்னும் சிலரும் "நான் செத்த பிறகு வா" என்றால் எமக்கு விளங்கவில்லை; அதற்கு என்ன பொருள் சொல்லுங்கள் Sir எனக் கேட்டதிலிருந்து நான் விளங்கிக் கொண்டேன். உங்கள் வினாவுக்கு விடைகூறு முன் கதையின் அமைப்பைச் சுருக்கமாகக் கூறுகிறேன் கவனியுங்கள் என்றார். Sir அவரது குரல் மூலம் பரவிக் கொண்டிருந்தது கதை.

அன்றொரு நாட்காலை தனது பரிவாரம் புடைசூழ பவனி வந்து கொண்டிருந்தான் ஒரு நாட்டின் அரசன். அவன் சென்ற வழியின் இரு மருங்கும் மக்கள் கூட்டம் கொடிகள் ஏந்திய கைகளை அசைத்து கொற்றவனுக்கு வாழ்த்துரைகள் வழங்கி அவனை வழியனுப்பி வைத்துச் சென்றது. அக்கூட்டம் அரசனது தேரை இழுத்துச் சென்ற வெள்ளைக் குதிரைகளோ வேகமாகப் பறந்தன. அரசனின் சேர்விடம் ஓர் ஆச்சிரமம் அந்த இடம் வந்ததும் தேர் நின்று விட்டது. ஆச்சிரமப் பெரும் வளவில் ஆங்காங்கே நின்று தத்தம் வேலைகளில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள் துறவிகள். ஆயினும், அரசன் வந்து பெரு வாயிற் கதவடியில் நிற்பதை அந்தத் துறவிகளில் எவரேனும் அவதானிப்பதாகவோ; அருகில் வந்து அரசனைக் கனம் பண்ணுவதாகவோ; மரியாதை செலுத்தி அழைத்துச் செல்வதாகவோ இல்லை. ஆத்திரம் வெடிக்கத் தொடங்கியது அரசனுக்கு. எரிமலையாக வெடித்த வேந்தனை விளங்கிக் கொண்ட அரசனின் மெய்க்காப்பாளன், தனது கரங்களைத் தட்டி, அங்கு வேலை செய்வோரை அழைக்கின்றான். எல்லாம் வீண்; பெருவாசற் கதவைத் திறக்கிறார்கள் அரசனின் போர் வீரர்கள். ஆச்சிரமப் பிரதம துறவியிடம் செல்கின்றான் மன்னன். அங்கே அவர் இல்லை; பதிலாக வேறொரு துறவி காணப்படுகிறார். உங்கள் தலைவரிடம் அறிவுரை கேட்க வந்தேன்; இங்கு எவருமே என்னைக் கனம் பண்ணுவதாகத் தெரியவில்லை. இந்த நாட்டை ஆளுவதால் எதையுமே சாதிக்கக் கூடிய மன்னன் நான் எனத் தெரிந்தும் என்னை அசட்டை செய்து விட்டீர்கள்; போகட்டும் உங்கள் தலைவரை அவசியமாக நான் காணவேண்டும்". மன்னனின் மாகோபத்தை உணர்ந்த துறவி "அவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது காணமுடியாது தியானத்தில் இருக்கிறார். எப்போது வருவார் என்பது எங்கள் ஊகத்திற்கப்பாற்பட்டது". எனக்கூறி முடித்தார். "அப்படியானால் இன்னொரு நாள் வருகிறேன்" நாளையும் நேரத்தையும் குறித்து வீட்டு அகன்றான் அரசன். நாளும் நேரமும் வந்தது. பிரதம துறவியின் முன் அரசன் நிற்கின்றான். "நான் செத்த பிறகு வா, அறிவுரை கூறுகிறேன்" என்றார் துறவி. திரும்பத் திரும்ப அரசன் கேட்கிறான். அதே பதிலைக் கூறிவிட்டுத் தியான மண்டபத்துக்குட் சென்று விடுகிறார் துறவி. அரசனும் எதுவுமே விளங்காதவனாய் அரண்மனை திரும்பி விடுகிறான். நான் செத்த பிறகு வா என்பது அரசனின் செவிப் பறைகளைத் தவிடு பொடியாக்கி விட்டது. கதையை முடித்து விட்டார் Sir.

அமைதி நிலவிய வகுப்பறையில் பற்பல பெருமூச்சுக்கள் வெளியேறி அறைச் சுவர்களை முட்டி மோதிக் கொண்டிருந்தன. "அவர் செத்த பிறகு எப்படி Sir அறிவுரை கூறுமுடியும்?" சாந்தனும் வேறு சிலரும் கேட்கிறார்கள். "சிந்தியுங்கள் சிந்திக்கும் மனிதன் சாதனை படைப்பான்". இது Sir, மாணவ மூளைகள் குழம்புகின்றன. அவர்களின் உள்ளங்கள் தளம்புகின்றன. ஏலாது Sir அடுத்த பாடவேளை விளக்குங்கள் இது மாணவர்கள்.

"நான்" என்பது ஆணவம்; அந்த ஆணவம் மடிந்த பிறகு; அது உன்னை விட்டு அகன்ற பிறகு; நீ அதனைத் தூக்கி எறிந்த பிறகு; குழி தோண்டிப் புதைத்த பிறகு வா; அறிவுரை கூறுகிறேன். இதிலிருந்து நாம் அறிவது உன்னிடம் ஆணவம் இல்லையெனில் அன்பும், அறிவும் இருக்கும். அப்படிப்பட்ட உனக்கு யாருமே அறிவுரை கூறத்தேவையில்லை. ஆத்திரம் வராது; அதனால் அனைத்தும் நீயே அறிவாய். நீயும் உன் நாடும் அமைதி கண்டு இன்பம் கொள்ளும்" என்ற கருத்தையே நான் செத்த பிறகு வா, அறிவுரை கூறுகிறேன் என அரசனின் உள்ளத்திற் பாய்ச்சியிருக்கிறார் துறவி" என்று Sir அவர்கள் கூறி முடிப்பதற்கும் மணி அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

எனது ஆசான் அவர்கள் கண்டிப்பானவர்; ஆனால் கருத்துக்களை எமக்கு அள்ளித் தரும் போது தித்திப்பானவர்; தனது மாணவர்கள் நல்ல நல்ல கருத்துக்களைக் கட்டி எழுப்புகிறார்களா எனக் கண்காணிப்பதில் உன்னிப்பானவர்; மாணவரின் நலனுக்காக நல்லுதவி செய்வதிலோ மட்டில்லாதவர்; எவரையும் எடுத்தெறிந்து பேசிடாத செட்டில்லாதவர்; மற்றவனை மிதித்தழிக்கும் தீய செயலிற் பற்றில்லாதவர்; செய்கின்ற நன்மைக்கு இதுதான்அளவு என்ற கட்டில்லாதவர்; தான் எடுத்த நல்ல கருத்தைச் செயற்படுத்துவதிற் தப்பில்லாதவர்; கூடாத கூட்டத்தோடு நட்பில்லாதவர்; கெட்ட செயல் அனைத்துக்கும் ஒப்பில்லாதவர்; பெரியோரைப் பேணி மதிக்கும் பண்பில் ஆதவர். அவரிடம் மூன்று ஆண்டுகள் S.S.C வரை தமிழ் பயின்ற என் நண்பர்களுக்கும் எனக்கும் ஆதவர். வானத்து ஆதவனின் உதவியோடு உயிர்கள் பயிர்கள் எப்படி நன்மை பெற்று வளர்கின்றனவோ அப்படியே என்ஆசான் A.D.Paul அவர்களிடம் தமிழ் கற்று அந்தத் தமிழின் இனிமையால் உந்தப்பட்டு, காலப் போக்கில் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியைப் பிரதம பாடமாக ஏற்றுப் பட்டம் பெற்றேன், என்பதை நினைத்துப் பூசிக்கிறேன்.

அவரது சிறப்பம்சங்கள் நான் கண்டவை பற்பல; ஒன்றை மட்டும் உங்கள் நினைவில் நிழலாட வைக்கிறேன். எனது சகமாணவனின் அண்ணன் சித்திரன் ஒரு பட்டதாரி; கொழும்பு வாசி; அவருக்கு ஒரு திருமணம் ஒழுங்காகியது;பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் பெட்டி மாறலும் செய்து விட்டார்கள். இதன் பிறகு மாப்பிள்ளையைப் பெண்பிள்ளையும், பெண்பிள்ளையை மாப்பிள்ளையும் நேரடியாகப் பார்க்க வேண்டும் என்ற படலமொன்றும் உருவாகியது. அவர்களின் உணர்வலைகளுக்கு வரம்பு கட்டாது அதையும் நிறைவேற்றினார்கள். அது நிறைவேறி மூன்றாம் நாள் பெண் வீட்டில் சற்றுக் குழப்பம் மாப்பிள்ளையைப் பெண்பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. என்றொரு உடைசல் அந்தக் கலியாணப் பாலத்தில் ஏற்படலாயிற்று. கலியாணப் பாலம் சிறிது சிறிதாக உடைகின்ற வேளை குறுக்கிட்டார் என் ஆசான். முதலாவது பெண்ணோடு உரையாடினார். இருமணி நேரம் ' நிலாந்தினி, உனக்கு நீ அழகு; சித்திரனுக்கு சித்திரன் அழகு; காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. காக்கையைப் பார்த்து அழகுக் கிளி சிரிக்கும்; தோகை மயில் பழிக்கும்; கிளியைப் பார்த்துக் கரிக் குருவியும் காகமும் இகழும்; மயிலைப் பார்த்து மாங்குயிலும் தூக்கணாங் குருவியும் சிரிக்கும்; இது இயற்கை. உன்னைப் பார்த்து எத்தனை பேர் சிரிக்கிறார்கள்; புகழ்கிறார்கள் அறிவாயா? சித்திரனைப் பார்த்து எத்தனை பேர் பெருமைப் படுகிறார்கள்; எத்தனை பேர் பழிக்கிறார்கள் தெரியுமா? ஒருவனின் நடை, உடை, முகம், அகம், சொல், பல் இவைகள் சிலருக்கு பிடிக்கும், சிலருக்குப் பிடிக்காது; பகிடியாய் அமையும் ஆகவே உன் முடிவை மாற்றி விடு; நீ என்னிடம பிரத்தியேகமாக தமிழ் படித்தவள்; சித்திரன் எனது பாடசாலையில் என்னிடம் தமிழ் படித்தவன்.; இருவரும் இணைவதை நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன. அழகு என்பது உடற் கட்டில்; உறுப்புக்களின் வனப்பில் மாத்திரம் இருக்கிறதென்று நினைப்பது மடமை மட்டுமல்ல; அது அறிவின் வெறுமையையும் காட்டுவதாக அமைகிறது. உடல் இன்று இருக்கும்; நாளை மயானம் சென்று விடும்.; அழகு இன்று பளிச்சிடும்; நாளை வெளுறிப் பழுதாகி விடும். ஆனால் உள்ளத்து அழகு என்ற பண்பு, அன்பு. அறிவு இது தான் நிலைக்கக் கூடியது. இதைவிட இனி என்ன இருக்கிறது நான் சொல்வதற்கு?

காலம் கடந்தது; நாதஸ்வரம் இசைக்க; தவில் முழங்க; சித்திரன் – நிலாந்தினி திருமண இணைப்பு இரு மன இணைப்பாகியது. Sir, அவர்களோடு என் நண்பர்களும் நானும் அருகருகே அமர்ந்து திருமண உண்டியைச் சுவைத்தோம் உண்மையில் எனது ஆசான் இருள் நிறைந்த உள்ளங்களில் ஒளி பரப்பிய ஆதவன் தான். "பிறப்புக்கு இலக்கணம் அமைத்த இறைவன் இறப்புக்குரிய காலத்தை ஏன் எமக்குக் காட்டவில்லை? இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கலாம்" என என் ஆசானை நன்கு புரிந்த நண்பர் ஒருவர் என்னிடம் ஆங்கிலத்திற் கூறினார். நான் சொன்னேன் இறைவன் எமது இறப்புக்கு எல்லை வகுத்திருந்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிற் பல சாதனைகள் தோன்றியிருக்காது. இறப்புக்கு எல்லை வகித்திடாத இறைவனின் செயல் நிச்சயம் ஓர் அற்புதம் தான் எங்களின் அறிவை இறைவன் மட்டுப் படுத்தியதற்குக் காரணம் எந்த நோக்கத்திற்காக இந்தப் பூமிக்கு அவர் எம்மை அனுப்பினாரோ அந்த நோக்கத்தை நாம் நிறைவேற்றுவோம் என்பது தான்" "God in his mercy has limited our knowledge so that we might fulfil our duty in the sphere to which he has appointed us" என்ற ஓர் ஆங்கிலக் கூற்றை கூறினோன். அவர் அதைச் சரி என ஆமோதித்தார்.

நான் படித்த கதீட்றல் கல்லூரியில் பல தமிழ் விழாக்களைச் சிறப்பாகச் செய்து முடித்தவர். கொழும்பிலுள்ள கிறிஸ்தவ சங்கங்கள் சிலவற்றில் அங்கம் வகித்து தன்னாலான கடமைகளை ஆற்றியவர். கொழும்பு ஜம்பெற்றா மெதடிஸ்த ஆலயத்தின் நற்செய்திப் பணியாளராக இருந்தவர். கொட்டாஞ்சேனை பரி. யாக்கோபு ஆலயத்தில் நற்பணி புரிந்தவர் . கரப்பந்தாட்டம், மேசைப் பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களைச் சிறப்பாக விளையாடினார். நான் அவரிடம் கரபந்தாட்டமும், மேசைப்பந்தாட்டமும் பயின்றவன். எமது கல்லூரி மட்டத்தில் நடத்தப்பட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் 'Senior Champion' ஆக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட போது ஓடி வந்து என்னைக் கட்டியணைத்து, "எனது உறவினன் என்ற முறையில் அல்ல, எனது மாணவன் என்ற ரீதியில் நான் பெருமைப்படுகிறேன், ஆசிக்கிறேன்" என்றார்.

எனது மாமி முறையான அலிஸ் ஆச்சிமுத்து அவர்கள் யோசேப்பு உபாத்தியாயர் அவர்களை விவாகம் செய்தபடியால் என் ஆசான் அவர்களும் எனக்கு ஓர் அண்ணர் முறையாகினார். நானும் அவரை எனது உறவினன் என்ற முறையால் அல்ல எனது ஆசான் என்ற முறையில் அவரின் உருவத்தை அவருக்குத் தெரியாமலே என் உள்ளத்திற் கீறி வைத்திருக்கிறேன்;செதுக்கி வைத்திருக்கிறேன் He is always in the hearts of his beloved pupils. I have engraved him in my heart.

அவருடைய ஆத்மா திருப்தியடையும்; இறைவனின் இனிய சமுகத்தில் அவர் சுகித்து; களித்து; சுகமாயிருப்பார்; இயேசுவின் நாமத்தை வாழ்த்திக் கொண்டேயிருப்பார். நீடு வாழ்க அவர் பெயர்.

நவாலியூர். சி.என். செல்லத்துரை,
(நவாலியூரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியாதவர்

குப்பி விளக்கில் குலவிய ஒளிக் கீற்றில்
சின்ன அறையில் வைத்தென்னை என்
அம்மா 'ஆனா' என்றெழுத்தை அழகாக
ஆரம்பித்தே சொல்லித் தந்தா
நானாய்ப் படிப்பதற்கு நான் பட்ட துன்பங்கள்
தானாய் என்பக்கம் கல்வி வர மறுத்த வேளை
தேனாய் தீந் தமிழோடு பாடமெல்லாம்
மேலாய் எனக்கு ஊட்டி வைத்த என்
மாமாவை எண்ணிப் பார்க்கிறேன்

பத்திரிகை படி என்பார், படித்த பின்
பல கேள்விகளைக் கேட்டு வைத்தும்
இத் தரையில் என் பொது அறிவு வளர்வதற்கும்
போட்டிகளில் பரிசுகளைப் பெறுவதற்கும்
முனைப்பாக நின்ற வித்தகனே;
மறக்காது என் மனது.

தந்தையை இழந்த வேளை
நாங்கள் தலைவனை இழந்து நின்றோம்! ஒரு
தலைவனாய் நின்றெம் கருமங்கள்
சிந்தையில் ஏற்றுச் செய்தவனே!
உன் அக்காமாரின் துயரங்களை
துடைத்து நின்று ஆறுதல் சொன்னவனே;
கட்டையடியில் நீ நின்று தான்
கதியால்களையும் போட்டாய்.
கணக்குகளையும் நீதான் சரி செய்தாய்!
நாங்கள் நிம்மதியடைந்தோம்
நீ இல்லாவிடில் ........ உன் சகோதரிகள் நாங்கள்?

பச்சைக் குழந்தை ஒன்று
தாயின் முகம் காணா ஜீவன்
அவன் ........ சீவநாதன் கண்ணாடிப் பேழையுள்
உயிருக்குப் போராடி
காட்சிப் பொருளாக இருந்த வேளை
அவன் மீது அதீத அக்கறை வைத்து
காத்தல் புரிந்த முதல்வன் நீ தான்!
அதன் பின்பு தான்
அவன் தந்தையும்: என்தாயும் !
இன்று ஜீவன் பல ஜீவன்களுக்கு சேவை செய்கிறான்.
அது உன் மனதில் ஆத்ம திருப்தி தந்திருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவின் ஆசிரிய சேவை
மதிக்கப்பட வேண்டியது
பாடசாலையில் ஓய்வு நேரத்திலும்
பாடம் கற்றுக் கொடுக்கும்
ஆசான்கள் இன்று இல்லை.
எல்லா பாடங்களையும்
நன்கு விளங்க வைப்பார் மாமா!
கற்பித்தலில் நிறைவான பெயர் எடுத்தவர்
ரியூசன் கொடுக்காது பாடசாலையிற் கற்பித்து
நிறைவான வாழ்வு கண்டவர்

எதற்கும் நேரம் வகுக்கப்படும்
விளையாட்டு, கல்வி
எல்லாமே நேரத்தின் படி நடக்கும்!
சின்னப் பிள்ளைகளான எம்முடன்
பந்தடித்த நாட்கள் வந்து போகிறது
ரேபிள் ரெனிசா, கரபந்தாட்டமா?
ஆடு களத்தில் அவர் அணியும்
வெள்ளையிலான களிசான், ரீ ஷேட்டும்
வெள்ளைச் சப்பாத்தும் காட்சிக்கு இனிமை தரும்.
விளையாடுபவர்கள் வெற்றியே
நோக்காக விளையாடுவார்கள்!
இவரோ தோல்வியையும் ஏற்கும் சமர்த்தர்!

இறை பக்தி இவருடன் பிறந்தது
சுகாதார வாழ்வு தேக சுகத்தை வளர்த்தது.
திடமான தேகமும் காலங்கள் கடந்து
செல்கையில் பெலவீனம் அடையும் என்பது
மாமாவுக்கும் விதி விலக்கல்ல;
மாமா மரித்து விட்டார் என
மனது அழுகிறது.
தன்னாலான சேவையை
நமக்கு புரிந்து செய்தார்!
மாமா எமக்கு ஒரு தலைவன்!
அந்த வகையில் இந்த இழப்பு – எமக்கு பேரிழப்பு

கடவுள் அவரைப் படைத்தார்
அவரது சேவையைப் பெற்று
தன்னிடம் அழைத்து விட்டார்
இறைவா உனக்கு எமது நன்றிகள்!
அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்!

சின்னத்தம்பி – ரவீந்திரன்
(வதிரி–சி–ரவீந்திரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE PAUL ATHAN I KNEW

It was sad to hear the demise of paul Athan. He has had a very special place in our family circles as a model of perfection, a man of high integrity, a man of few words and a person who led an examplary life.

As the first term school vacations approach, way back in the fifties I used to be thrilled with the mere thought of giong to the North where we stay a full month or so in Vathiry. The hospitality with which we were welcomed at our relatives places still lingers in my mind. Wherever we may go we return to paul Athan's house for the night. He along with his younger brother Niles Athan and his mother would attend to all our needs, during the entire month's stay.

In the late fifties I had the rare privilege of staying with him along with my beloved elder brother while sehooling at St.Benedict's College Kotahena. This being a very crucial period of our lives, we were shown the correct path by him. He set a very high standard in his life style. A strict disciplinarian, paul Athan would guide us in soft way. Punctuality and a high sense of devotion to his duties were something that any one could emulate from him. Though dressed in immaculate white national dress he possesed a very sound knowledge in English and was reasonably good at Sinhala too.

He was a devoted Christian. Not only he had a sound knowledge of the scriptures but he also practised his religion to the word. He led his family in the true Christian way and showed the true path to many of his followers. Not a Sunday passed without his presence in the church, with his family. He followed it up with attending meetings to uplift the spiritual needs of his parishioners.

He was a teacher par Excellence. Never would have been a day when he was late to school. He would have utilized the minimum days of his alloted days of leave, that too when he very badly needed them. His sense of duty would have been a shining exampl to his colleagues. He served at C/Cathedral College, Kotahena for most part of his teaching career before he was appointed as a Principal in the North. He retired from services in 1982 after 40 years of fruitful service, as a teacher.

He was an untiring sportsman. He excelled in the fields of Volleyball and Table Tennis. While at Kotahena he was a member of a local community centre and would very often visit there to play a game of Table Tennis. He became the Champion on many occasions beating many fancied opponents much younger than him who came from affluent backgrounds, I remember him accompanying me in a game of Cricket whenever we went to Vathiri to spend our holidays. His first love was Volleyball and he represented his club "Bombers" in the local

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tournaments in the Vadamarachchi areas. He was humble in victory and took up defeat in good sports.

He was thus a complete individual. A devoted husband to his wife, a much loved father to his two children, an outstanding teacher, a keen sportsman, a leader to his relatives and to sum it all "A true Christian". He was sent by God Almighty to fulfil a mission and I'm sure he did his best to achieve it.

May his soul rest in eternal peace.

**Godfrey Pushparajah.**

## புனித யாத்திரை

அறிவு மட்டும் உனக்கிருந்தால் போதாதடா தம்பி
அது சிறக்க உன்னகத்தில் இன்னு மொன்று வேண்டும்
துணிவு சொட்டும் தைரியத்தை வரவழைத்து வாழ்வாய்
தரணியலே பற்பலரை நல்வழியிற் சேர்ப்பாய்

நாடு வீட்டு நாடு வந்து எங்கள் பக்கமாகி
நாகரிக மேடுதனில் வாழ எம்மை ஆக்கி
கூடு வீட்டு மேலுலகம் போகும் வரை இங்கு
கர்த்தர் பணி செய்த மேலை நாட்டவரைப் பார்ப்பாய்

பக்திவயி ராக்கியத்தை யேசுமீது கொண்டு
பழுது இலா மதபணிக்கு அர்ப்பணித்துத் தம்மை
சக்திவடி வானஇறை யோடுசேர்ந்த வெள்ளைக்
காரருக்கு நாங்கள் தலை வணங்கவேண்டும் தம்பி

என்று பல அறிவெனக்கு ஊட்டிவைத்த தங்கள்
எண்ண அலை இன்றுமெந்தன் உள்ளத்திலே ஓடும்
நன்றுபல சொல்லி என்னை ஒருமனித னாக்கி
வைத்த உங்கள் பெரும்பணிக்குக் கைம்மாறேது செய்தேன்

கோடியருள் குவலயத்தில் உங்களுக்கு ஈந்த
கடவுளுக்கு நன்றிபல நித்தமும் சொல் வீர்கள்
பாடியருள் வேண்டி நீங்கள் உருகுமந்தக் காட்சி
பாரினிலே உங்களோடு இறைஇருந்த சாட்சி

உள்ளமதைக் கோயிலாக்கி இறைவனை வைத் தீர்கள்
உன்னதமாய் நற்துதிகள் அவருக்கேசெய் தீர்கள்
வள்ளமதைக் கொண்டுகடல் தாண்டும்நிலை போல
விண்ணவனில் பக்திகொண்டு மோட்சமடைந் தீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலழகும் உயிரழகும் உளத்தழகும் புத்திக்
கூரழகும் உற்றகல்விப் பெருமழகும் பக்திச்
சிறப்பழகும் பெரியவரைப் பேணழகும் நல்ல
சிரிப்பழகும் புனிதமுகப் பேரழகும் கொண்ட

உங்களைப்போல் உயிர்களைத்தான் இறைபடைக்க வேண்டும்
உற்றதுணை எங்களுக்கு உங்களைப் போல் வேண்டும்
திங்களைப்போல் ஒளிமுகத்துத் தேன்மகனே நீங்கள்
தித்தித்ததும் உயர்வுற்றதும் மறைவதற்குத் தானா

கள்ளமேது மின்றிநீங்கள் வாழ்ந்ததனா லன்றோ
கடுகளவும் வதையுறாமல் படுக்கை விரிக்காமல்
நல்லபேறு பெற்று இந்தப் பூவுலக மக்கள்
நல்லசாவு அரும்பிறவி என்று வாய்கள் மலர

ஆயிரமாய் மாணவரும் ஆசிரியர் மாரும்
அருகிருந்த உறவினரும் அவர்களோடு ஊரும்
ஓரினமாய்க் கூடியுங்கள் புனிதயாத்தி ரைக்கு
ஓங்கு துதி சாற்றினார்கள் தங்கள்பக்கம் மொய்த்து

ஆலயத்துப் போதகர்கள் அன்புக்குரு மார்கள்
அவரில் நல்ல பற்றுவைத்த வேறு பெரும் ஆட்கள்
நேசமுற்று உங்கள்நல்ல பணியுரைக்கும் போர்கள்
நயமுடனே உங்கள் பேரில் உரைகளாற்றி னார்கள்

காலமென்று என்னைத்தானே கட்டியிங்கு வைக்க
கவலைகொண்ட எந்தனுள்ளம் என்னைவந்து தைக்க
ஆலமொன்று உண்டவன்போல் நானடங்கி விட்டேன்
ஆருக்கிங்கு சொல்லியிதை நானழுது நிற்பேன்

சாவுஒன்று எல்லோருக்கும் உண்டுஅது உண்மை
சீர்சிறப்பு மரணமென்று எல்லோருக்கும் இல்லை
பூவுமுண்டு பிஞ்சுமுண்டு ஒருசிலவே கனியும்
பழுத்தகனி உங்களை நாம் என்று காண்பம் இனியும்

உங்களது மறைவினாலே உளமுடைந்து கதறும்
உற்றமனை யாள்மகளும் மகனும் மரு மக்களும்
சித்தமது கலங்கினார்கள் அவர்களுக்கு எந்தன்
சிறிதளவு ஆறுதலைக் கூறுகிறேன் ஏற்க

கவிஞர். சி.என். செல்லத்துரை
(நவாலியூரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவாக

கர்த்தருக்குள் இளைப்பாறிய திரு. A.D. போல் அவர்களின் நிறைவாக 'புனிதயாத்திரை' எனும் இந்நூல் வெளிவந்துள்ளது.
முதலாவது பாகத்தில் கிறிஸ்தவ நற்செய்தி எப்படி சென்றடைந்தது. அதனால் ஏற்பட்ட மாற்றங்கள்: பற்றியே கூறப்பட்டுள்ளது. இப்பாகத்தை ஆய்வாளர்கள் ஒரு கைநூலாகவும் பிரயோகிக்கலாம்.

இரண்டாம் பாகம் திரு. A.D. போல் பற்றிய நினைவுப்பதிவுகளாகும். அன்புக்குரியோர் தந்தவை பதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் நன்றிகள்!

எவ்வளவோ சிரமங்களுக்கும் மத்தியில் இந்நூலை வெளிக்கொணர்ந்த டேவிட் நைல்ஸ் குடும்பத்தினருக்கு நன்றிகள் உரித்தாகும் நூல் வெளிவருமா? என்று கேள்வி ஒலிகள் எழுந்த வேளை வெளிவருவதற்கு தன் ஒத்துழைப்பை நல்கிய இறைவனுக்கும்; திரு D.A. நைல்ஸ் சார்பாக நன்றி தெரிவிக்கின்றேன்.

'புனிதயாத்திரை' பற்றிய தங்கள் கருத்துகளை வரவேற்கிறோம். இளைய தலைமுறையினர் இதுபற்றிய தெளிவை தங்கள் பெரியவர்களிடம் கேட்டுக் கொள்ளலாம்!

அடுத்த நூலாக 'இசைப் பாரம்பரியம்' எனும் நூல் வெளிவரவுள்ளது.
அதற்கும் இறைவன் கருணை கிடைத்தால் வெளிவருவது திண்ணம்.

இதனை அழகுற அச்சிட்டு தந்த Repro-Grafic-Tec அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"வானம்பாடி"
தொகுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DAN TV
2623062

Dish Asia Net Work

**REPRO GRAFIC TEC**
282, Grandpass Road,
Colombo 14.

Tel: 074-610933

0777410428

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org